# நதி

ஏப்ரல் - மே, 07

## ஹிட்லரின் இறுதிக்கணங்கள்

## பாவற்காய் சாமியார்



## மாயக்கண்ணாடி


திரைவிமர்சனம்




## உலகக் கோப்பை கிரிக்கெட்

ரூ 45/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சித்திரையில் ஒரு
முத்திரை பதிக்கனுஞ் சாமி
இத்தரையில் ஒரு
சித்திரமாய் வாழனுஞ் சாமி
தந்திரம் வேணாஞ் சாமி
அந்தரமும் வேணாஞ் சாமி
தொந்தரவும் வேணாஞ் சாமி
நித்திரையில் நிம்மதியும்
சித்திரையில் அமைதியும்
தந்தாலே போதுஞ்சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அப்பாவி






# அன்பு

அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர் ஈராக்கிற்கு அனுப்பப்பட்டார். அங்கு பணியிலீடுபட்டிருந்த நேரம் வீதியில் ஒரு ஏழைச் சிறுவனைக் கண்டார். ஏதோ ஒரு ஈர்ப்பு வர அந்தச் சிறுவனின் வீடுவரை சென்றுவிட்டார். அங்கு சென்ற பின்புதான் அந்தப் பையனுக்கு இருதயக் கோளாறு இருப்பதும், அதற்கு மருத்துவம் செய்யுமளவிற்கு சிறுவனின் குடும்பம் வசதியானதல்ல என்பதால், அவனது எதிர்காலமே கேள்விக் குறியாக இருப்பதும் தெரிய வந்தது. அமெரிக்காவிலுள்ள தனது மனைவி இருதய வைத்திய நிபுணர் என்பதால், அந்தச் சிறுவனை அமெரிக்காவிற்கு அனுப்பித் தனது மனைவி மூலம் குணப்படுத்த விரும்பினார். அதற்காக அதிகாரிகளிடம் போராடி சிறுவனை அமெரிக்கா அனுப்புவதற்கு ஏற்பாடு செய்து, அனுப்பியும் விட்டார். அமெரிக்காவில் சிறுவனுக்கு சத்திர சிகிச்சைக்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த நேரம், ஈராக்கில் அந்த இராணுவ வீரர் நிராயுதபாணியாக இருந்த வேளையில் ஒரு தாக்குதலில் கொல்லப்பட்டு விட்டார். இந்தச் செய்தியை அறிந்தும் அவரது மனைவி மனவுறுதியோடு நின்று அறுவைச் சிகிச்சை முடிந்த பின்பே அழத் தொடங்கியிருக்கிறார்.


அன்பு என்பது மனித குலத்திற்கே அவசியமான ஒன்று. அது சக்திமிக்கது. அன்பு என்பது உணரப்பட வேண்டிய ஒன்று. கொடுத்துப் பெற வேண்டியது. மனித குலத்தின் மேல் கொண்ட மட்டற்ற அன்பினால் தன்னுயிரை ஈந்த யேசுவின் மரணம், உயிர்ப்பை இந்த ஏப்ரல் மாதத்தில் நினைவு கூர்ந்திருக்கிறோம்.

கொஞ்சகாலமே கிடைக்கின்ற மனித வாழ்க்கையில், அன்பினால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. குடும்பத்தில் தோன்றும் அன்பு அயலவர்க்கும் சமூகத்திற்கும் பரவி ஊர், உலகம் என்று வியாபித்தால் எல்லா நாடுகள் நகரங்களிலும் அமைதி, சமாதானம் நிலவும். பிரதிபலன் எதிர்பாராது மற்றவரை அன்பு செய்ய இப்போதே தொடங்குவோம். உலக அமைதியில் பங்கெடுப்போம், அனுமார் போல் இல்லாவிட்டாலும் அணில் போலாவது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூதா திருத்தலம்



ஒரு மழை நாளின் மாலைப் பொழுதில் அந்த இடத்திற்குச் சென்றிருந்தேன். கம்பஹா நகரிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இந்தி கொல்ல என்ற சிறுகிராமம் அது. அங்கேதான் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் யாத்திரைத் தலமான புனித யூதா ததேயு தேவாலயம் உள்ளது.

நான் சென்றிருந்தபோது மழை விட்டு மெல்லிய சாரல் மட்டும் வீசிறிக் கொண்டிருந்தது. தேவாலய வளவினுள் நுழைந்த போது பேரிரைச்சல் ஒன்று வரவேற்றது. அது முழுவதுமே பச்சைக் கிளிகள் கத்தும் ஒலி என்று தெரிந்தபோது நம்பவே முடியவில்லை. யாழ்.கச்சேரிக்கு முன்னாலுள்ள பழைய பூங்கா வளவிலுள்ள வெளவால்கள் கூட்டமாக வசிப்பதைப் போல இங்கே கிளிகள் வசிக்கின்றன. ஆனால் மாலைநேரத்தில் சத்தம்தான் பலமடங்கு அதிகம். தேவாலயத்தின் முன்புறமாகச் செல்லும் வீதியிலிருந்து வாயிலினூடாகச் சென்றால் முதலில் வருவது சிறு தென்னந்தோப்புத்தான். அந்தத் தோப்பில் 178





தென்னைகள் நிற்கிறது என்றால் நம்ப முடியவில்லை. அங்குதான் அந்தக் கிளிகள் வாசம் செய்கின்றன. அப்படியே நேரே இருப்பது புனித யூதாவின் ஆளுயரத் திருச்சுருபம். அதன் இரண்டு பக்கமும் மெழுகுதிரி கொளுத்துமிடமும் இடது பக்கமாகத் தேவாலயமும் உள்ளன.

இந்தத் தேவாலயம் 55 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. பௌத்த சமயத்தவர்களை அதிகமாகக் கொண்டுள்ள இந்தி கொல்லவில் இது அமைந்திருந்தாலும் அவர்களும் வந்து வணங்கும் திருத்தலமாக உள்ளது. அதுபோல் இந்துக்களும் வணங்கிச் செல்கின்றனர்.

புனித யூதாவைக் கத்தோலிக்கர்கள் கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலராகக் கருதித் தமது வேண்டுதல்களைச் சமர்ப்பிக்கின்றனர். தாம் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதாக உணருவோர் எங்கெங்கிருந்தெல்லாமோ வருகிறார்கள். வேண்டுகிறார்கள். அவை நிறைவேறும் போது அவர்கள் நம்பிக்கை உறுதியடைகிறது. தமது அனுபவத்தை மற்றவர்களுக்குக் கூறும் போது அவர்களும் வருகிறார்கள். இவ்வாறு அந்தத் தேவாலயம் அரை நூற்றாண்டிற்குள் பெரும் பிரபல்யம் அடைந்து விட்டது.

ஆலயத்தின் இடது புறமாக லூர்து மாதாவின் கெபி என்று அழைக்கப்படும் சிறு கற்கோயில் காணப்படுகிறது.


ஆலயத்தைச் சுற்றி வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் நடந்து வருவதும் ஒரு சுகமான அனுபவம்தான். பெரியதும் சிறியதுமான மரங்களும் செடி களும் விதவிதமாய் இரண்டு பக்கமும் நடப்பட்டு அழகையும் குளிர்மையையும் தருகின்றன. குறிப்பாக அழகுதரும் செடிகளில் பலவகை அங்கே காணப்படுகின்றன. அவற்றைப் பார்க்கும்போது யார்தான் இவ்வளவு சிரத்தையாக இவற்றைப் பராமரிக்கிறார்கள் என்ற எண்ணம்தான் ஏற்படுகிறது. அவ்வளவு நேர்த்தியாக அம்மரங்கள் ஒருவித கலையுணர்வோடு அமைக்கப்பட்டுள்ளன.

எழுதியவர்
**மானா ஈனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தேவாலயத்தின் 50 வருட பூர்த்தியை முன்னிட்டு இன்னுமொரு தேவாலயம் தற்போதைய தேவாலயத்தின் பின்னாலுள்ள இடத்தில் கட்டப்பட்டுள்ளது. அந்தப் புதிய தேவாலயத்தைப் பார்க்கும் போதெல்லாம் பெல்ஜிய த்தில் நான் பார்த்த புதுமை மிகுந்த மரியாள் தேவாலயம்தான் ஞாபகத்திற்கு வருகிறது. வெளிப்புறத்தைப் பார்த்தால் அதே அமைப்பு, அதே தோற்றம், அதே சூழ்நிலை என்று எனது இனிமையான பழைய நினைவுகளை மீட்க அந்தத் தேவாலயம் வழி செய்கின்றது. அதனைச் சுற்றியும் வீதிகள் மரங்கள் எல்லாமே உண்டு. அந்த ஆலயத்தின் முன்புறத் தூண்களோடு 12 புனிதர்களின் ஆளுயரச் சுருபங்கள் நிறுத்தப் பட்டுள்ளன. அவற்றில் சிலர் யேசுவின் சீடர்கள். சிலர் சுவிசேஷகர்கள். இந்தச் சுருபங்களை அமைப்பதற்கான செலவுகளையும் ஆலயத்தின் உள்ளே இருக்கும் ஆசனங் களுக்கான செலவுகளையும் தனிப்பட்டவர்களும் சில நிறுவனங்களும் ஏற்றிருக்கின்றன என்பதை அறிந்தபோது எப்படி இவ்வளவு ஒரு அழகான ஆலயம் அமைந்தது என்ற கேள்விக்கு இலகுவில் விடை கிடைத்தது. அது பலரது கூட்டு முயற்சி என்பதே. அங்கே போசன சாலை உண்டு. இயற்கைக் கடன் கழிப்பத ற்கான வசதிகள் உண்டு. அமைதியான சூழல் உண்டு. மன அமைதி தரும் ஆலயங்கள் உண்டு. பலமுறை சென்று வந்தும் மீண்டும் மீண்டும் செல்ல வேண்டும் என்ற ஆசையும் நிறையவே உண்டு.





(சின்னஞ் சிறுகதை)



# பதினெட்டாங்கட்டில்

யோ.யோண்சன் ராஜ்குமார்

யாழ்ப்பாண வைத்தி யசாலை அதிகாலை ஐந்து மணிக்கே ஆரவாரிக்கத் தொடங்கி விட்டது. வாட்டுகள் எல்லாம் உயிர் பெற்றனவாக வேகப் பட்டுக் கொண்டன. கழிவறைகளும், பைப்புகளும் நெருக்கடி ஓசைகளில் மிதந்தன. வாட்டுகளில் நோயாளிகளின் காலைக்கடன்கள் முடிக்கப் பட்டுத் தலைமை வைத்தியரின் வரவுக்கான தயார்ப்படுத்தல்களில் அனைவரும் மும்முரப் பட்டுக் கொண்டிருந்தனர். அது இருபத்திநாலாவது வாட். 'காயவாட்' என்றும் அதுக்கொரு பெயர். அதில் பின்பகுதி நீரிழிவு நோயாளிகளுக்கான பகுதி. அந்த வாட் முழுவதும் ஆரவாரித்துக் கொண்டிருந்தும் பதினெட்டாம் கட்டிலில் கிடந்த உருவம் மட்டும் எந்த உணர்வுகளுக்கும் அப்பாற்பட்டு உறங்கிக்கொண்டிருந்தது.

மலசல வாசனை அந்தக் கட்டிலில் இருந்து வந்து கொண்டிருந்தது. அதனைக் கடந்து செல்பவர்கள் மூக்கைப் பொத்தியவாறு நகர்ந்தனர்.

"என்னப்பா இண்டைக்கும் உந்தாளுக்கு ஒருத்தரும் வரயில்லையே", அது முன்கட்டில்காரன். "பாவம் கிழவனுக்கு ஆள் உதவியில்லை. அவற்ர மனிசி மட்டும் இடைக்கிடை வரும் ஒருத்தனைப் பார்க்கிறதுக்குப் பிடிச்சு விட்டுட்டுப் போயும், அவனும் உந்தப்பக்கத்திலையும் வாறான் இல்லை", அது அடுத்த கட்டிலில் மாமனாரைப் பார்த்துக் கொண்டி ருக்கும் சிவா. "மச்சான் மூக்குக்கு எயார் பிறஸ்னர் ஏதும் வேண்டிப் போட்டாத்தான் உதில நிக்கலாம் போல இருக்கு..." அடிதடியில் காலில் காயத்துடன் இருந்த நிர்மலனின் வார்த்தைகள். இவர்களோடு காலையில் செய்திப் பேப்பருடன் வரும் சுமனும் சேர்ந்துகொண்டு ".....எத்தின நாளைக்கடாப்பா உதைச் சகிச்சுக் கொண்டு போறது". இவை எதையும் காதில் வாங்கிக்கொள்ளாது அந்த உருவம் அசைவற்றுக் கிடந்தது. எண்பது வயதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்ததன் அடையாளமான நரைமயிரும், தேய் வதற்கு இனி இடமில்லை என்று சொல்லத் தக்க கால்பாதமும், நன்கு மெலிந்துபோன கால்களும் மட்டும் தான் அந்த உருவத்தின் போர்வைக்கு வெளியே தலை காட்டின. இற்றுப்போன பழைய போர்வை அந்த உருவத்தை மூடியிருந்தது. அந்தக் கட்டிலுக் குரிய மேசையில் பழுப்பேறிய தண்ணீர்க் கோப்பை, ஒரு பிளாஸ்டிக் பீங்கான், அதில் காய்ந்த ஒரு துண்டுபாண், நெளிந்த தண்ணீர்ப்போத்தல், சில பேப்பர்சரைகள் இவை தவிர வேறு எதுவும் அதில் இருக்க வில்லை. பார்ப்பதற்கு ஆளி ல்லாத கைவிடப் பட்ட அந்த ஜீவன் பரிதாபத்துக் குரியதாகச் சுருண்டு படுத்துக் கிடந்தது.

நோயாயினும் கூடிக்கதைத்துப் பகிடிவிட்டுப் பொழுதுபோக்கிய அக்கட்டிலின் அயற்கட்டில் சமூகம் பதினெட்டாம் கட்டில் காரனால் மட்டுமே அருவருப்புக் காட்டியது. "உதை இப்படியே விட்டால் சரிவராது. போய் நேஸட்டச்சொல்லி உந்தாள வேற எங்கயாவது மாத்தச் சொல்ல வேணும்" அது நிர்மலன். அவர்களது முயற்சி பலித்தது. அக்கட்டிலுக்கு வந்த நேஸ், மூக்கைப் பொத்திய வாறு... "ஐயா, ஐயா..." கூப்பிட்டுவிட்டு லேபர் ஒருவனுக்கு அவரை இடமாற்றக்


சுப்ரா ரூவர்ஸ்

இலங்கை முழுவதற்குமான....

- போக்குவரத்து
- விமான நிலையத்திற்கான வாகன வசதிகள்
- வீட்டு வாடகை சேவைகள்
- திருமணத்திற்கான வாடகை கார் ஒழுங்குகள் மற்றும்
- போட்டோ வீடியோ சேவைகளுக்கும்

தொடர்பு கொள்க

ஈசன்: 0777-271313

விலாசம்:

85/9, பிக்கரிங்ஸ் வீதி,

கொழும்பு -13.

இலங்கை

தொ.பே.

0777-253803




கட்டளையிட்டுவிட்டுச் சென்று நகரவும், லேபர் அவரது போர்வையை அருவருப்புடன் தொட்டுத்திறந்து அதிரவும் சரியாக இருந்தது. "சேர்... ஆள் போட்டுது..."

வாட் அல்லோல கல்லோலப் பட்டது. எதுவும் பேசாமல் குறண்டிக்கொண்டு கிடந்த அந்த உருவம் எதையும் பேசாமலே போய்விட்டது. அவரது இறப்பு அயற்கட் டில்களில் சற்று அதிர்ச்சியைத் தந்தாலும் தொல்லை தீர்ந்த தென்ற மனநிறைவை எல்லோ ரும் கொண்டிருந்தனர்.

அவரது சடலம் அகற்றப்பட்டதும் அந்த இடம் நன்கு கழுவித் துப்பரவு செய்யப்பட்டு நெருப்புத் தண்ணீர் தெளிக்கப்பட்டது. "... ச ... இப்பிடிக் கிடந்து அழுந்தாமல் சாகிறது எவ்வ ளவோ மேல்..." அயற்சமூகம் தத்துவங்களுடன் தமது உரையாடலைத் தொடர்ந்தன.

மறுநாள் காலை பத்திரிகை யுடன் வந்த சமன்.... "இந்தப் பேப்பரில இருக்கிற ஆளைத் தெரியுதே...." "எங்கையோ கண்ட மாதிரி இருக்குது... அட உது எங்கட பதினெட்டாங் கட்டில்காரன்" எல்லோருக்கும் தூக்கி வாரிப்போட்டது. ஆவலுடன் கூடியவர்கள் பத்திரி கையில் வெளிவந்த அஞ்சலிக் குறிப்பினுள் மூழ்கினர். "கண்ணீர் அஞ்சலி ஈழத்தின் மூத்த எழுத்தாளரும் தத்துவவாதியு மான அமரர் அ.ம.கனகசாமியின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து நிற்கின்றோம் — இலக்கிய நண்பர்கள்" எல்லோருடைய முகங்களில் படர்ந்த அதிர்ச்சிக் கோலம் அவர்களின் மனவரு டல்களின் வெளிப்பாடாய் முகங் காட்டின. ●

வாழ்க்கைச் செலவு அதிகரித்து விட்ட இந்தக் காலத்தில் கொண்டாட்டங்கள் வரும்போது அவற்றை எளிமை யாகக் கொண்டா டுவதே சிறந்தது. எமக் கெனக் கொண்டாட்டங்கள் வந்தால் கூடியவரை ஆடம்பர ங்களைத் தவிர்க்கிறோம். சிலவே ளைகளில் சாதாரண மாண வர்கள் கூட திருமண ங்கள் போன்றவற்றை பெரிய நட்சத்திர விடுதிகளில் நடத்து வதைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. அவற்றோடு ஆடம்பர அலங்கா ரங்கள் இசைக்குழுக்கள் என்று நிறையச் செலவு செய்கின்றனர். இவற்றைத் தவிர்த்து நமது தமிழ்க் கலாச்சாரப்படி திரும ணங்களைக் கோயில்களில் சிறப்பாகச் செய்ய லாமே. ஏனைய வைபவ ங்களை வீட்டில் எளிமையாகச் செய்ய லாம். பெரும் செலவைத் தவிர்க கலாம்.

திரு பாலன்.
வியாபாரம் வெள்ளவத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தில் மர்மங்கள் 1

இந்த உலக சரித்திரத்தை மாற்றி எழுதியதில் ஹிட்லருக்குப் பெரும்பங்குண்டு. உலக சனத்தொகையில் ஆறுரைக் கோடியைக் காணாமற் போகச் செய்த 'பெருமை' ஹிட்லருக்கே உரியது. அவரது இறுதிக்காலம் மற்றும் மரணம் தொடர்பான பல தகவல்கள் நம்மிற் பலர் அறியாதது.

ஜேர்மனியின் அயல் நாடான ஒஸ்ரியாவின், வட பகுதியிலுள்ள பிரானவ் என்ற இடத்தில் 1889 ஏப்ரல் 20ம் திகதி ஹிட்லர் பிறந்தார். அங்கு அதிகாரியான இவர் தந்தையின் பெயர் அலோய்ஸ் ஷிக்கில் கிரப்பர் ஹிட்லர். அவருக்கு மூன்று மனைவிமார். மூன்றாவது மனைவியின் நான்காவது மகன்தான் ஹிட்லர்.

பிறந்தது முதலே ஹிட்லரைப் பல்வேறு நோய்கள் தாக்கின. அவ்வளவிற்கு ஒரு நோஞ்சானாகவே வளர்ந்தார். தொழிலின் காரணமாக இவரது தந்தை அடிக்கடி வெளியூர் சென்று விடுவதால் கூடுதலான நேரம் தாயாரின் பராமரிப்பிலேயே இருந்ததால் இயல்பாகவே ஹிட்லரிடம் தாய்ப்பாசம் ஆழமாகக் குடிகொண்டது. சிறுவயது முதலே கல்வியில் முதன்மை பெற்று விளங்கிய ஹிட்லர் ஓவியம் வரைவதில் தேர்ச்சி பெற்றவராயும், கதைகள் நாவல்களை வாசிப்பதில் ஈடுபாடுடைய வராகவும் வளர்ந்தார்.

ஹிட்லரின் 14 வது வயதில் அதாவது 1903ம் ஆண்டு ஹிட்லரின் தந்தை இறந்தபின் கண்டிப்பு இல்லாததால் ஆசிரியர்களோடு கூடச் சண்டை பிடிக்குமளவிற்கு முரட்டுத்தனம் கொண்டவராக மாறத் தொடங்கினார். பாடசாலைப் படிப்பு முடிந்து இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தமைக்கான சான்றிதழைப் பெற்றுக்கொண்டு வரும்வழியில் நண்பர்களோடு சேர்ந்து மது அருந்திக் கும்மாளமடித்ததோடு அந்தச் சான்றிதழையும் கிழித்தார். இதையறிந்த ஹிட்லரின் ஆசிரியர் அவரைக் கண்டித்தபோது 'இனி மதுவையோ, சிகரட்டையோ தொட மாட்டேன்' என்று சத்தியம் செய்தார். இது நடந்தது

**ஹிட்லரின் இறுதிக் கணங்கள்**



ஹிட்லரின் 17வது வயதில். அதுமுதல் இறுதிவரை அந்தச் சத்தியத்தை ஹிட்லர் மீறவே இல்லை.

நேரம் ஒரு மனிதனுடைய வாழ்க்கைப் பாதையை எப்படியெல்லாம் நிர்ணயிக்கிறது என்பதற்கு ஹிட்லரின் சரிதம் தான் மிக உயர்ந்த உதாரணம். அந்த வகையில் 1907ம் ஆண்டு ஹிட்லருக்கு மிகவும் முக்கியமான, சோகமான, அவரது வாழ்க்கையையே புரட்டிப் போட்ட ஆண்டு. அவ்வாண்டில் ஹிட்லர் ஓவியப் பள்ளியில் சேர முயன்று தோல்வி கண்டார். அந்தச் சோகம் மறையும் முன்பே அந்த வருடக் கடைசியில் அவரது தாயாரும் இறந்து போனார். மனமுடைந்து போன ஹிட்லர் ஓவியப் பள்ளியில் சேரும் நோக்கத்துடன் ஜேர்மனிக்கு வந்தார். ஜேர்மனியில் சிந்தியா என்ற பெண்ணுடன் ஏற்பட்ட காதல் தோல்வியில் முடிய அந்த விரக்தியில் ஹிட்லர் இராணுவத்தில் போய் சேர்ந்து கொண்டார்.



1914ம் ஆண்டு முதல் 1918ம் ஆண்டுவரை முதலாம் உலகப் போர் நடந்தது யாவரும் அறிந்ததே. இந்தப் போர் முழுவதிலும் ஜேர்மனியப் படையில் ஒரு போர்வீரராக ஹிட்லர் பங்குபற்றியிருந்தார். ஜேர்மனி இந்தப் போரில் பெருந்தோல்வியடைந்ததோடு அந்நாட்டுக்குரிய பல பிரதேசங்களையும் இழந்திருந்தது. இந்தத் தோல்விக்கு ஜனநாயகவாதிகளும், யூதர்களுமே காரணம் என்ற வெறுப்புணர்ச்சி ஹிட்லரின் மனதில் வேரூன்றியது. இந்த உலகிலேயே சிறந்த இனத்தினர் ஜேர்மனியர் மட்டுமே ஆகவே இந்த உலகம் முழுவதும் ஜேர்மனிய ஆட்சிக்குட்பட்டதாக இருக்க வேண்டும்' என்பதே ஹிட்லரின் எண்ணமாக இருந்தது. இப்போது அமெரிக்கா விரும்புவது போல.

அதே எண்ணங்களுடன் ஹிட்லர் அரசியலில் நுழைந்தார். தேசிய சோஷலிஸ்ட் ஜேர்மன் தொழிலாளர் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். இதன் பின்புதான் ஹிட்லரின் பேச்சுத் திறமை வெளிப்பட ஆரம்பித்தது. இதுவரை காலமும் அவர் வாசித்தவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஒவ்வொன்றாக அளந்து விட அவரது கட்சியினரும் மக்களும் மயங்கிப் போனார்கள். இந்தச் செல்வாக்கு மிக விரைவிலேயே ஹிட்லரை அக்கட்சியின் தலைவராக்கியது.

ஒருமுறை ஹிட்லர் ஆட்சியாளருக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டு அரசாங்கத்தைக் கைப்பற்ற முனைந்தார். ஆனால் அது தோல்வியில் முடிந்தது. இதனால் ஓராண்டு சிறை வாசமும் அனுபவிக்க நேர்ந்தது. சிறையிலிருந்தபோது 'எனது போராட்டம்' என்ற தலைப்பில் ஹிட்லர் எழுதிய அவரது சுயசரிதை உலகப் புகழ் பெற்றது.

1928ம் ஆண்டு நடந்த தேர்தலில் இவரது கட்சி தோல்வி அடைந்தாலும் ஹிட்லர் சோர்ந்து போய்விட வில்லை. தனது கட்சிக்கு நாஸிக்கட்சி எனப் பெயர்மாற்றம் செய்து புதிய உத்வேகத்துடன் வழிநடத்தினார். ஹிட்லருக்கு இயல்பாக இருந்த பேச்சுத் திறமையும், எழுத்தாற்றலும் கட்சியை வளர்க்கப் பெருந் துணை புரிந்தது. இவற்றோடு ஒருநாளில் நான்கு மணிநேரம் மட்டுமே தூங்குகின்ற அளவிலிருந்த அவரது கடும் உழைப்பும், சாதிக்க வேண்டும் என்ற வெறியும், துடிதுடிப்பும் சேர்ந்து கொண்டது. இன்னொருபுறம் ஹிட்லரால் ஆரம்பிக்கப்பட்ட கட்சியின் பத்திரிகையும் எழுச்சிக்கனலை மக்கள் மனதில் பற்றியெரியச் செய்து கொண்டிருந்தது. 'எல்லாமே நாட்டின் நலனுக் காகவும், வளர்ச்சிக்காகவுமே' என்று ஹிட்லர் ஓதிய மந்திரம் மக்களைக் கட்டிப் போட்டிருந்தது. ஹிட்லருக்காகப் பாராளுமன்றக் கட்டிடத்தைக் கொளுத்தும் அளவிற்கு மக்கள் ஆதரவு பெருகியிருந்தது.

அரசியல் வாழக்கையில் இப்படிக் கலக்கிக் கொண்டிருந்தாலும் ஹிட்லரின் தனிப்பட்ட வாழக்கையிலும் சில குறிப்பிட்டுக் கூறக்கூடிய விடயங்கள் நடந்தேறின. அவரது நண்பர் ஒருவர் புகைப்பட ஸ்ருடியோ ஒன்றை நடத்தி வந்தார். அங்கு அடிக்கடி சென்று வந்த ஹிட்லர் அங்கு ஒரு உதவியாளராகப் பணியாற்றி வந்த ஈவா ப்ரான் எனும் பெண்ணைக் கண்டு காதலுற்றார். அவள்மேல் ஹிட்லர் உயிரையே வைத்திருந்தார். ஈவா ப்ரானும் ஹிட்லர்மேல் அளவு கடந்த பாசம் வைத்திருந்தாள்.



1930ம் ஆண்டு முதல் திருமணம் செய்யாமலே இருவரும் சேர்ந்து வாழத் தொடங்கினர்.

அப்போது நாட்டின் தலைவராக இருந்தவர் ஹிண்டன்பேர்க். பெருகியிருந்த மக்கள் ஆதரவு காரணமாக ஹிட்லருக்குப் பிரதமர் பதவியைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு அவர் தள்ளப்பட்டார். 1933ம் ஆண்டு ஜனவரி 30ம் திகதி ஹிட்லர் பிரதமரானார். ஒன்றரை வருடத்தின்பின் ஹிண்டன்பேர்க் இறந்ததும் ஹிட்லருக்கு அடித்தது அதிர்ஷ்டம். உலகிற்குப் பிடித்தது துரதிர்ஷ்டம். நாட்டின் தலைவர் பதவி ஹிட்லரைத் தேடி வந்தது. தலைவரானதும் ஹிட்லர் தன்னை நாட்டின் சர்வாதிகாரியாகவும், இராணுவத் தளபதியாகவும் அறிவித்துக் கொண்டார். தன் அரசியல் எதிரிகளை எல்லாம் சிறையில் தள்ளிய ஹிட்லர் 'ஜேர்மனியில் இனி ஜனநாயகம் கிடையாது' என்று அறிவித்தார். எல்லாவற்றுக்கும் மக்கள் மகிழ்ச்சியுடன் தலையாட்டினர்.

அதிலிருந்து ஹிட்லர் சொல்வதெல்லாம் சட்டமென்றானது. எங்கும், எதிலும் ஹிட்லரின் நாமமே போற்றப்பட்டது. 1936ம் ஆண்டு பேர்லின் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றபோது ஹிட்லர் அதனைத் தனது பிரச்சாரத்திற்கு நன்கு பயன் படுத்திக் கொண்டார். எங்கும் ஹிட்லரின் பிரமாண்டமான "கட் – அவுட்"களும் பிரச்சார மயமாகவுமே அந்த ஒலிம்பிக் போட்டிகள் காணப்பட்டன. அந்தப் போட்டிகளின் போதுதான் ஒலிம்பிக் தீபத்தை ஓடிச்சென்று கொளுத்தும்முறை முதன்முதலாக நடைமுறைக்கு வந்தது. இப்படி ஒரு முறை அறிமுக மானமைக்கு மூலகாரணமே ஹிட்லர்தான். அவரது சொந்த மூளையில் உதித்த 'ஐடியா' இது என்பது குறிப்பிடத்தக்கது.

**லோஷன்**

ஹிட்லர் தனது நாமம் போற்றப்பட வேண்டுமென்பதற்காக நடத்திய கூத்துக்கள் பல. படமாளிகையில் திரைப்படம் தொடங்குமுன் ஹிட்லரின் படம் காண்பிக்கப்படும். அப்போது எல்லோரும் எழுந்து நிற்க வேண்டும். தொலைபேசி மணி ஒலித்தால் அதை எடுப்பவர் 'ஹிட்லரின் நாமம் போற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதாக' என்று சொல்ல வேண்டும். 'ஹலோ' என்று சொன்னால் அதன்பின்னர் இன்னொரு தொலைபேசி அழைப்பிற்கு "ஹலோ" சொல்ல அவர் உயிரோடு இருக்க வேண்டுமே. இப்படிப் புதுமையான பல விடயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஜேர்மனியின் இணையற்ற தலைவன் இவன்தான் என அந்த நாட்டு மக்கள் ஹிட்லர்மீது அசைக்க முடியாத நம்பிக்கையும், கண்மூடித்தனமான பாசமும் கொண்டிருந்த ஒரு உச்சக்கட்டத்தில் ஹிட்லர் தனது அடுத்த ஒரு அநியாயத்தை அரங்கேற்ற ஆரம்பித்தார். யூதர்களை அழிக்கும் படலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அறிமுகப்படுத்தினார். முதலாம் உலகமகா யுத்தத்தில் நடுநிலை என்ற அடிப்படையில் யூதர்கள் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்ததாலேயே ஜேர்மனி அந்தப் போரில் பல பிரதேசங்களை இழந்து படுதோல்வியடைந்தது. அதற்குப் பழிக்குப் பழிவாங்கவே இந்த நடவடிக்கை என்று ஹிட்லர் அந்த அநீதிக்கு விளக்கம் சொன்னபோது யூதர்களை அழித்தொழிக்க வேண்டுமென்ற காழ்ப்புணர்ச்சி படையினர் மற்றும் மக்கள் மனதில் இயல்பாகவே எழுந்தது. தாம் செய்வது தவறு என்பது தெரியாத அளவிற்கு அவர்களின் கண்கள் கட்டப்பட்டிருந்தன என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒரு பாவமும் அறியாத அப்பாவி யூதர்கள் கொலை செய்யப்பட்ட வழிவகைகள் படுபயங்கரமானவை. ஹிட்லரின் இராணுவம் யூதர்களை அழிப்பதற்குப் புதுப்புது வழிமுறைகளையெல்லாம் அறிமுகப்படுத்தியது. குடிப்பதற்குத் தண்ணீர் கூடக் கொடுக்கப்படாமல் பட்டினி போட்டுக் கொல்லப்பட்டவர்கள் பலர். அறைகளில் அடைக்கப்பட்டு விஷப் புகையூட்டிக் கொலை செய்யப்பட்டவர்கள் இன்னும் பலர். ஒருநாளில் ஆறாயிரம் முதல் பத்தாயிரம் வரையிலான யூதர்கள் இவ்வாறு மடிந்தனர். ஹிட்லரின் இராணுவம் இந்த எண்ணிக்கை குறைந்து விடாமல் பார்த்துக் கொண்டதோடு நிறையப் பேரை எப்படி ஒரேயடியாகக் கொலை செய்யலாம் என்று வழி தேடியது. அதிகமான யூதர்களை அழித்தொழிப்பது யார் என்று இராணுவ அதிகாரிகளிடையே போட்டி ஏற்படும் அளவிற்கு இந்நிலை உயர்ந்தது. யூதர்களைக் கொல்வதைக் கண் காணிக்கத்



தனி அமைச்சு, ஒருநாளில் இத்தனை யூதர்கள் இறக்க வேண்டும் என்ற இலக்கு, மருத்துவ பரிசோதனைக்கும், படையினர் குறிபார்த்துச் சுட்டுப் பழகவும் யூதர்களைப் பயன்படுத்தல் என்ற பாணியிலேயே யூத இன அழிப்புப் படலம் தொடர்ந்தது.

இதன் பின்னர் ஒரு கட்டத்தில் இந்த உலகையே தான் ஆளும் நேரம் நெருங்கிவிட்டது என்று கருதிய ஹிட்லர் தான் பிறந்த நாடான ஒஸ்ரியாவில் தொடங்கி அல்பேனியா, செக்கோஸ்லாவாக்கியா, போலந்து என ஒவ்வொரு நாடாகக் கைப்பற்றத் தொடங்கியதும் இரண்டாவது உலகமகா யுத்தம் மூண்டது. ஹிட்லருக்கு ஆதரவாக இத்தாலியும், ஜப்பானும் இருந்தன. ஹிட்லரின் வேகத்தைக் கண்டு மிரண்டெழுந்த அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் தமக்குள் கூட்டணி அமைத்துக் கொண்டு போரில் குதித்ததும் போர் உலக யுத்தம் என்ற வடிவத்தைப் பெற்றது.

ஹிட்லரின் படை பெரிதாக இருந்தது. அப்படையிடம் இருந்த நாட்டுப் பற்றும், வீரமும் அளவு கடந்ததாயிருந்தது. ஹிட்லரின போர் நுணுக்கங்கள் வியப்புக்குரி வையாயிருந்தன. ஆனால் எல்லாம் இருந்தும் அகலக் கால் வைத்ததாலோ என்னவோ அவரால் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. அவைபற்றியும் ஹிட்லரின் இறுதிக் கணங்கள் பற்றியும் அடுத்த இதழில் பார்ப்போம். ●

(மிகுதி அடுத்த இதழில்)

*இப்போதுள்ள வாழ்க்கைச் செலவுப் பிரச்சினைக்கு முகம்கொடுக்க வேண்டுமென்றால் தேவையில்லாத செலவுகளை குறைக்க வேண்டும். நாமும் நிறையச் செலவுகளைக்குறைத்து விட்டோம். முன்பெல்லாம் நண்பர்களோடு இங்கேயுள்ள சில வெளிநாட்டு உணவு விடுதிகளுக்குச் செல்வோம். இப்போது அவற்றை முற்றாக நிறுத்தி விட்டோம். ஏதேனும் விசேஷம் என்றால் மட்டும் இடம் பார்த்து நண்பர்களோடு வெளியிடங்களில் சாப்பிடுகிறோம். அதே போல விடுமுறை நாளென்றால் நண்பர்களோடு போய் ஏதாவது ஒரு படம் பார்த்தேயாக வேண்டுமென்ற நிலையில் முன்பு இருந்தோம். இப்போது நல்ல படம் என்று அறிந்தால் நமக்குப் பிடித்த நடிகரின் படம் என்றால் எப்போதாவது திரையரங்கிற்குச் சென்று பார்க்கிறோம். அதற்கும் வசதிப்படா விட்டால் வீட்டில் பார்ப்பதுதான் ஒரே வழி.*

**தினேஷ்**
**தனியார் நிறுவன உத்தியோகத்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஸ்வநாதன் ஆனந்த்

சதுரங்கம் என்பது மூளைசாலிகளின் விளையாட்டு. அறிவுள்ளவர்களைப் புத்தியுள்ளவர்களாக்கும் விளையாட்டு. தடைகளை ஒருவர் ஏற்படுத்த மற்றவர் அதிலிருந்து விடுபடுவதும் அதற்குரிய நுணுக்கங்களைப் பயன்படுத்தி வெற்றி பெறுவதுமே இந்த விளையாட்டின் தாற்பரியம். எப்படிப் பார்த்தாலும் உலகம் முழுவதுமே பிரபல்யமான உள்ளக விளையாட்டு சதுரங்கம்.

சதுரங்க உலகில் ரஷ்யாவின் காரி கஸ்பரோவிற்கு அடுத்தபடியாக இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்தை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். பலமுறை கிராண்ட் மாஸ்ரர் பட்டத்தை வென்று தனது இனத்திற்குப் பெருமை சேர்த்த தமிழர். காரி கஸ்பரோவிற்கும் இவருக்கும் எப்போதுமே பலத்த போட்டி தான். காரி கஸ்பரோவ் ஓய்வு பெற்ற பின் விஸ்வநாதன் ஆனந்தின் ராஜாங்கம் தான் இப்போது சதுரங்கத்தில். சதுரங்க விளையாட்டின் மூலமும், விளம்பரங்களின் மூலமும் கோடிகளைக் குவித்தவர் விஸ்வநாதன் ஆனந்த். ஒருமுறை இவர் ஜேர்மனிக்குச் சென்றிருந்த சமயம் தொடரூந்தில் (அதானுங்க நம்ம புகைவண்டி. அங்கே புகைவண்டிக்குப் புகை வராது என்பதால் தொடரூந்து என்று சொல்வோமா?) பயணம் செய்து கொண்டிருந்தார். இவருக்கு முன்னால் ஒரு ஜேர்மனியரைத் தவிர அருகில் வேறு யாரும் இருக்கவில்லை. இருவரும் சிறிது நேரம் எதுவும் பேசிக்கொள்ளவில்லை.

சற்று நேரம் கழிந்ததும் ஜேர்மனியர் ஆனந்திடம் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டார். ஆனந்த் செஸ் விளையாடுகிறேன் என்று சொன்னார். ஜேர்மனியர் நான் உங்கள் விளையாட்டைக் கேட்கவில்லை நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்? என்று கேட்டார். ஆனந்த் மீண்டும் நான் செஸ் விளையாடுகிறேன் என்றே பதில் சொன்னார். ஜேர்மனியருக்கு சற்றுக் கோபம் வந்துவிட்டது. என்ன வேலை? என்று கொஞ்சம் கடுமையாகத் திரும்பவும் கேட்டார். ஆனந்த் செஸ் விளையாடுவதுதான் என்று தெளிவாகச் சொன்னார்.

அதன்பின் ஜேர்மனியர் எதுவும் பேசவில்லை. ஏதோ புரிந்து கொண்டவர் போல் சற்று அமைதியாக இருந்தார். சிறிது நேரத்தின் பின் சொன்னார் "நீங்கள் செஸ் விளையாடுவது பெரிய விடயமல்ல ஆனால் விளையாடினால் விஸ்வநாதன் ஆனந்த் போல் விளையாட வேண்டும்" என்றார்.





# உலகக் கோப்பை 2007



சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கு இப்போது வயது முப்பத்தாறு. 1971ம் ஆண்டு அவுஸ்திரேலிய இங்கிலாந்து அணிகளுக்கிடையே மெல்போர்ணில் நடைபெற்ற போட்டியே முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டியாகும். அதுபோல் முதல் உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிகள் 1975ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்றன. அதன்போது லோட்ஸ் மைதானத்தில் நடந்த இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை வீழத்திய மேற்கிந்திய தீவுகள் அணி கிண்ணத்தை சுவீகரித்தது. ஆனால் இன்றோ நிலைமை தலைகீழ். இம்முறை மேற்கிந்திய தீவுகள் அணி 'சுப்பர்-8' சுற்றில் இதுவரை ஒரு போட்டியைக் கூட வெல்லவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. இத்தனைக்கும் உலகின் தலை சிறந்த வீரரான பிறையன் லாராவின் தலைமையிலான அணி அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் பக்கம் ஈர்ப்பினை ஏற்படுத்துவதற்கு அடித்தளமிட்ட ஆண்டு 1977. அப்போது தொலைக்காட்சி நிறுவனமொன்றை நடத்திவந்த கெரி பக்கர் என்பவர் கிரிக்கெட் போட்டிகளை நேரடி ஒளிபரப்புச் செய்ய அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையிடம் அனுமதி கோரினார். ஆனால் அனுமதி மறுக்கப்பட்டது. கொதிப்படைந்த கெரி பக்கர் தலைசிறந்த கிரிக்கெட் வீரர்கள் 51 பேருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டு அவர்களிடையே உத்தியோகபூர்வமற்ற போட்டிகளை நடத்தினார். சும்மா நடத்தவில்லை. பல அதிரடி மாற்றங்களோடு போட்டிகள் நடந்தன. அதுவரை பகலில் மட்டுமே நடந்த போட்டிகள் மின்விளக்குகளின் ஒளியில் இரவு பகல் ஆட்டங்களாக நடைபெற்றன. வீரர்கள் வெள்ளைநிற ஆடையுடன் விளையாடியமை மாற்றப்பட்டு ஒவ்வொரு அணியும் வர்ணச் சீருடையுடன் ஆடின. சிவப்பு நிறத்தில் விளையாடப்பட்ட பந்து வெள்ளை நிறமாக மாற்றப்பட்டது. அந்தப் போட்டிகள் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டன. கெரி பக்கர் ஏற்படுத்திய மாற்றங்கள்தான் இன்று கிரிக்கெட் காய்ச்சலைப் பல நாடுகளுக்கும் பரவச் செய்திருக்கிறது. அதன் பின்னர் அவரது வழிக்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை வந்தது தனிக்கதை.

தமிழ்கூறு நல்லுலகம் கிரிக்கெட்டில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ் அர்த்தங்களைத் தேடித் தன்பாட்டில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமாகக் கூறிக்கொண்டிருக்கிறது. 'ஓவர்' என்பதற்கு (அடுத்த பந்து வீச்சாளருக்குப் பந்து கைமாறுவதால்) பந்துமாற்றம் என்றும் 'மெய்டின் ஓவருக்கு' (ஓட்டங்கள் எதையும் பிரசவிக்காத பந்துமாற்றம் என்பதால்) கன்னிப் பந்துமாற்றம் என்றும் பல தமிழ்ச் சொற்களை அமிர்தராஜ் அவர்கள் 1981ம் ஆண்டு யாழ். சம் பத்திரிசியார் கல்லூரியில் மாணவராயிருந்தபோதே அறிமுகப்படுத்திப் பயன்படுத்தினார். எவ்வளவு அழகான சொற்கள் அவை. அக்கல்லூரியின் கிரிக்கெட் சம்பியன் போட்டிகளின்போது அமிர்தராஜ் அவர்களும் பின்னர் அவரது தம்பிமார்களான சத்தியநாதன் அவரைத் தொடர்ந்து நிக்ஸன் ஆகியோரும் நேர்முக வர்ணனை வழங்கியதை நேரடியாகவே கேட்க முடிந்திருக்கிறது. அப்போதெல்லாம் கிரிக்கெட்டிலுள்ள ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை அவர்கள் சரளமாக





விட்டெறிவார்கள். அவற்றில் சிலவற்றை சில வானொலி மற்றும் தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் இப்போது பயன்படுத்துகிறார்கள். அமிர்தராஜ் அவர்கள் அதே கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து பின்னர் வெளிநாட்டில் கொஞ்ச காலம் வாழ்ந்து விட்டு மிக இளம் வயதிலேயே மறைந்து விட்டார்.

கிரிக்கெட் என்ற விளையாட்டு இங்கிலாந்திலேயே தோன்றியது என்பது ஒரு ஊகத்தின் அடிப்படையில் நிலவும் பேச்சு. ஆனால் அது எங்கே எப்படி எப்போது தோன்றியது என்பதற்கெல்லாம் சரியான சான்றுகள் கிடையாது. 1550ம் ஆண்டு இங்கிலாந்தின் சரேயிலுள்ள கில்ஃபோட் எனும் இடத்தில் கிரிக்கெட் விளையாடப்பட்டமைக்கான சான்றுகள் கிடைத்ததால் அந்த ஆண்டுதான் கிரிக்கெட்டின் தொடக்க ஆண்டாகவும் தொடங்கிய இடம் இங்கிலாந்து எனவும் கருதப்படுகிறது. சர்வதேச போட்டிகள் 1844ம் ஆண்டு ஆடப்பட்டிருந்தாலும் 1877ம் ஆண்டில் இருந்துதான் உத்தியோகபூர்வ சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் வரலாறு தொடங்குகிறது.

உலகக் கோப்பைத் தொடரில் இலங்கை அணி அரையிறுதியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. இக்கட்டுரை எழுதப்படும்வரை (10.04.2007) இலங்கை அணி சிறப்பாகவே விளையாடி வருகிறது.

'சுப்பர்-8' சுற்றில் தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து அணிகளுடனான ஆட்டம் மிகச் சிறப்பானது. இரண்டு போட்டிகளிலும் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி எதிரணிகளுக்குச் சிறிய இலக்குகளையே கொடுத்தது. ஆனாலும் இறுதிப் பந்துவரை போராடி திறமையை நிரூபித்தது. நான்கு பந்துமாற்றங்களில் ஐந்து விக்கெட்டுகள் கைவசம் இருக்க ஐந்து ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் இருந்த தென்னாபிரிக்காவை யாருமே இப்படிக் கலங்கடித்திருக்க மாட்டார்கள். அந்தப் போட்டியில் தென்னாபிரிக்கா வென்றிருந்தாலும் உலகமே இலங்கை அணியைப் பற்றித்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசியது? இங்கிலாந்துடனான போட்டியின் இறுதிப் பந்து வீசப்பட்டபோது அதைப் பார்த்தவர்கள் கதிரை நுனிக்கு வந்திருப்பார்கள். எவ்வளவு அருமையான வெற்றி அது. இறுதிப்போட்டிக்குத் தெரிவாகாது போனாலும் பரவாயில்லை. 1996 இல் பல விடயங்களைப் படிப்பித்ததைப் போல இம்முறையும் படிப்பித்து விட்டார்கள்.

அவுஸ்திரேலிய அணியே இம்முறையும் உலகக் கிண்ணத்தை வெல்லும் எனப் பலரும் எதிர்வு கூறியுள்ளனர். அவுஸ்திரேலியா ஒரு பலமான அணியே. அதன் சர்வதேச கிரிக்கெட்டுக்கு வயது நூறுக்கும் மேல். ஆனால் அந்த அணியை வீழ்த்தியே 1996 இல் இலங்கை உலகக் கிண்ணத்தை வென்றது. இம்முறையும் அப்படி நடக்காது என்பது என்ன நிச்சயம்? தற்போதைய நிலையில் இலங்கை 280 ஓட்டங்களை இலக்காகக் கொடுத்து அவுஸ்திரேலிய அணியைத் துடுப்பெடுத்தாட விட்டால் அந்த அணி எப்படித் தடுமாறுகிறது என்பதைப் பார்க்கலாம். ஏனெனில் இப்போது இலங்கை அணியின் பந்துவீச்சு பலமாக உள்ளது. துடுப்பாட்டமும் பரவாயில்லை. களத்தடுப்பு மட்டும் இன்னும் கொஞ்சம் பலமடைந்தால் அதாவது இந்திய அணியை வீழ்த்தியபோது காட்டிய களத்தடுப்புத் திறமையை வெளிப்படுத்தினால் 250 ஓட்டங்களுக்குள் அவுஸ்திரேலியாவைச் சுருட்டலாம்.

**வாழ்க்கைச் செலவு**

அதிகரித்துள்ள செலவுகளைச் சமாளிக்க பெற்றோர் கஷ்டப்படுவதை உணரக் கூடியதாக உள்ளது. ஆனாலும் எனது அவசியத் தேவைகளுக்காக கைத்தொலைபேசியும் வாங்கித் தந்துள்ளனர். இதில் கூடியவரை சிக்கனமாகவே இருக்கிறேன். அவசியம் ஏற்பட்டால் மட்டுமே அழைப்புகளை எடுப்பேன். மணித்தியாலக் கணக்கில் தொலைபேசியில் உரையாடுபவர்களை நான் கண்டிருக்கிறேன். இதெல்லாம் கையைக் கடிக்கும் விடயம் என்பது எனக்கு நன்கு தெரியும். பெரும்பாலும் சிற்றஞ்சல் (எஸ்.எம்.எஸ்) சேவையையே பயன்படுத்துவதால் எனது தொலைபேசிக்கான செலவு சில நூறு ரூபாய்க்குள்ளேயே கட்டுப்பாட்டுக்குள்ளிருக்கிறது. எல்லோரும் இப்படியே நடந்து கொண்டால் தொலைபேசி 'தொல்லை'பேசியாக மாறாது.

அனந்திகா மாணவி, வெள்ளவத்தை



**வாழ்க்கைச் செலவு**

எம்மைப் போன்றவர்களுக்கு உடைகளுக்குத்தான் அதிக செலவு ஏற்படுகிறது. முன்பெல்லாம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை புதிய உடை வாங்குவோம். அவ்வப்போது அறிமுகமாகும் ஃபஷனுக்கேற்றபடி கூடிய விலை கொடுத்தும் வாங்குவோம். இப்போதெல்லாம் அப்படியல்ல. நல்ல சப்பாத்து அல்லது பாதணி வாங்குவதற்கே 1500 அல்லது 2000 ரூபா செலவாகிறது. போக்குவரத்து உட்பட வேறு செலவுகளும் அதிகரித்து விட்டதால் ஆடை அணிகலன்களுக்கான செலவுகளைக் குறைக்க வேண்டியுள்ளது. அதனால் குறைவான விலையில் தரமானதைத் தேடி வாங்குகிறோம். அதுவும் நினைத்தபடி வாங்காமல் தேவை என்றால் மட்டும் வாங்குகிறோம்.

ராகேஷ் சர்மா, முகாமைத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

அரையிறுதியில் இலங்கை அணி நியூசிலாந்தைச் சந்திக்கக் கூடும். அதில் வென்றால் இறுதிப் போட்டிதான். நியூசிலாந்தும் சாதாரண அணியல்ல. பல திறமையான வீரர்களைக் கொண்ட அணி அது. அவுஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாக இலங்கைக்கு சவால் விடக் கூடிய அணி என்றால் அது நியூசிலாந்து மட்டுமே. அரையிறுதிக்கு முன் இரண்டு அணிகளும் சந்திக்க இருக்கின்றன. அந்தப் போட்டியில் தோல்வியடையும் அணி அரையிறுதியில் மிகவும் எச்சரிக்கையுடன் ஆடவே முயற்சிக்கும் என்பதால் அந்தப் போட்டி மிகவும் பரபரப்பானதாக இருக்கக் கூடும். எவ்வாறேனும் நியூசிலாந்துடனான போட்டிகளின்போது இலங்கை அணிக்கே சாதகமான நிலை காணப்படுகிறது.

இம்முறை இலங்கைத் துடுப்பாட்ட வரிசையில் இதுவரை ஏமாற்றியிருப்பவர் குமார் சங்கக்காரதான். சென்ற வருடத்தில் அகில உலக ரீதியிலேயே சிறந்த துடுப்பாட்ட வீரர்களுள் ஒருவராக மிளிர்ந்தவர் அவர். ஆனாலும் அவர் அப்படி சோபிக்காமலேயே போய்விடுவாரா? ஏதாவது ஒரு போட்டியில் தொடங்கத்தானே போகிறார் என்ற எதிர்பார்ப்பு இன்னமும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் எப்போது தொடங்குவார் என்பதுதான் பிரச்சினை. சிலவேளை இலங்கை அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டு அதிலும் சங்கக்கார சொதப்பினால் அதன்பின்னர் தொடங்குவதற்கு அவர் அணியில் இருக்க வேண்டுமே. அதுதானே பிரச்சினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கெட் போட்டி பற்றிய ஒரு ஹிந்தித் திரைப்படம் வெளிவந்து சக்கைப் போடு போட்டதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். ஆஸ்கார் விருதுக்கெனத் தெரிவுசெய்யப்பட்ட முதல் ஐந்து திரைப்படங்களுள் ஒன்றாக இடம் பிடித்துச் சொற்ப புள்ளி அடிப்படையில் வாய்ப்பை இழந்த அந்தப்படம் லகான். அதில் நன்கு பயிற்றப்பட்ட ஆங்கிலேய அணிக்கெதிராக கிரிக்கெட் வாசனையே அறியாத இந்திய அணி போராடி வெற்றி பெறுவது உணர்ச்சிமயமாக சித்திரிக்கப்பட்டிருக்கும். இலங்கை அணி அவுஸ்திரேலிய அணியை இறுதிப்போட்டியில் சந்திக்க நேரிட்டால் லகான் திரைப்படம் பலருக்கு ஞாபகம் வரும். இலங்கை வென்றால் அது இன்னொரு லகான் திரைப்படம் போல இருக்கும்.

எது எப்படியோ கிரிக்கெட் இன்று பல நாடுகளுக்கு வாழ்க்கை போலாகி விட்டது. அதுவும் உலகக் கோப்பைத் தருணங்களில் சில நாடுகளுக்கு அது திருவிழா போன்றது. அடுத்த நதி வரும்போது எந்த அணி கோப்பையை வென்றது என்று தெரியவந்திருக்கும். அவுஸ வந்திருக்கும். அது அவுஸ்திரேலியா, இலங்கை, நியூசிலாந்து, தென்னாபிரிக்காவோ அல்லது இங்கிலாந்தோ தெரியாது. பொறுத்திருந்து பார்ப்போம். அதுவரை கிரிக்கெட் காய்ச்சலால் பீடிக்கப்படாமல் எம்மைப் பாதுகாத்துக் கொள்வோம்.


*நாம் போக்குவரத்து விடயத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். கார் என்பது அத்தியாவசியமாக இருந்த நிலை மாறி இப்போது ஆடம்பரப் பொருள் என்ற நிலையில் வந்து நிற்கிறது. வீதிகளில் வாகனங்கள் அதிகரித்து விட்டன. அவற்றிற்கான எரிபொருள் விலையும் அதிகரித்து விட்டது. வாகனங்களின் விலையும் அதிகரித்து விட்டன. பெரிய பதவியில் உள்ளோர் வசதியுள்ளவர்கள் காரை ஆடம்பரத்திற்கென்று உபயோகிக்கின்றனர். ஆனால் தற்போதைய நிலையில் அது தவறு. நாம் அவசியமான தேவையின் பொருட்டே காரைப் பயன்படுத்துகிறோம். நான்கு அல்லது ஐந்து பேரென்றால் காரில் போகலாம். இரண்டு பேரென்றால் பஸ்ஸில் போகலாம். இது பல வகையில் செலவைக் குறைக்கும். வாகன நெருக்கடியில் சிக்கிக் கொண்டால் 14 கிலோ மீட்டருக்கு அளவான எரிபொருள் 10 கிலோ மீட்டருக்குக் கூடத் தாங்காது. இது தேவைதானா என்று யோசிக்கிறோம்.*

**செல்வி அனுஷா**
*வைத்தியர், கொழும்பு வைத்தியசாலை*



*கவிதை*

# கண்ணீர்



ஆச்சரியம்
மழையிலும் காய்கிறது
ஏழைகளின் வயிறு
கொடுமை
வெயிலிலும் தளைக்கிறது
முதலாளித்துவ சுரண்டல்

கற்பாறை அழுதால் அருவியாம்
கார்மேகம் அழுதால் மழையாம்
காரிருள் அழுதால்
பனித்துளியாம்
கமழும் பூ அழுதால்
தேன்துளியாம்
கர்மம் மனிதன் அழுதால்
கண்ணீராம்

கனவில் தொடங்கி
கடனில் முடியும் – நம்
ஆசையின் வடிவிலே
காதல்
பாழ்பட்டுப்போன தரிசு
நிலங்களாய்
எங்கள் முதிர் கன்னிகள்
ஒழிக்கவே முடியாத
இன்னொரு

எய்ட்சாய்
லஞ்சம்
நல்ல சவர்க்காரம் உண்டா?
மனங்களைத் துவைத்தெடுத்து
ஜாதி அழுக்கை நீக்க

நேற்றைய கனவில்
நாளைய கற்பனையில்
இன்றைய வாழ்க்கையை
தொலைத்து நிற்கிறோம்

யுத்தத்தின் சத்தத்தால்
நித்தமும் சித்திரைதான்
வானத்தின் கோபமாய்
வெள்ளம் ஒரு புறம்
சிதறும் வேட்டுக்களால்
பள்ளம் ஒரு புறம்
விடியலைத் தேடிநிற்கும்
உள்ளம் மறுபுறம்
நன்றாக மலரட்டும் மறுமை
எங்கள்
வாழ்க்கையிலும் போகட்டும்
வறுமை

**ஜமாளியா தாஹிர்**
**குருநாகல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொன்னதும் சொன்னதும்



அண்ணாத்துரை கட்டிய வீட்டில் (தி.மு.க. வில்) குடிபுகுந்தவர் கருணாநிதி.

தே. மு. தி. க. தலைவரும் நடிகருமான

**விஜயகாந்த்**



"குடி உள்ளே புகுந்ததால் அப்படிப் பேசிவிட்டார்."

தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான

**மு. கருணாநிதி**


**இலவச சேவை**

**காப்புறுதி** (Insurance) **சம்பந்தமான உங்களது**

- பிரச்சினைகள்
- புதிய காப்புறுதிகளை ஆரம்பித்தல்
- இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ளுதல்
- முதிர்வுப் பணம் பெறுதல்
- தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளுதல்

***மற்றும்***

**உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும் ஆலோசனை**

**தருகிறார் : உங்கள் சேவையாளன்**

நீ. அன்ரனி

**Mob: 0773 235964**

**E-mail:mnantony@hotmail.com**

**125, 1st Floor, T.B. Jaya Mw, Col-10.**





நதி என்றால் அன்பு

ஆசிரியர்

**லோஷன் மரியநாயகம்**

பிரதான கணனி வேலைகள்

**லங்கா பப்ளிஷிங் ஹவுஸ்**

துணைக் கணனி வேலைகள்

**ஆனந்த், சோபியா, பிரசன்னா**

கார்ட்டூன்

**பருதி**

விளம்பரங்கள்

**நீ.அன்ரனி (ஒருங்கிணைப்பாளர்)**

**நொயல், ஜாவிஸ், குபேரன்**

சுற்றோட்ட ஒருங்கிணைப்பாளர்

மு. பரமேஸ்வரன்

தொடர்புகள்

**ஜெறின்**

ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பாளர்

ஜேசுரட்ணம் - அதிபர்

ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்

சிறீதரன் - வர்த்தகர்

பரமேஸ்வரன் - வர்த்தகர்

முருகநேசன் - பொறியியலாளர்

மொறாயஸ் - விரிவுரையாளர்

றொபின்சன் - விரிவுரையாளர்

நளினி - ஆசிரியை

ஜெகதீஸ்வரன் - ஆசிரியர்

ஸ்ரீஸ்கந்த ராஜா - வர்த்தகர்

தொடர்புகளுக்கு

0777 769533


அடுத்த இதழிலிருந்து...

அன்பு...

அதிசயம்...

ஆச்சரியம்...

நிறைந்த ஒரு மனித நேயத் தொடர்

எய்ட்ஸ் ஒழிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஒரு சமூக சேவகன்

**"தாஸ்" எழுதும்**

**எய்ட்ஸில் விழுந்த**

**"விட்டில்கள்"**



"ஒருவர் 1950 இல் பிறந்திருந்தா இப்போ வயது என்னவா இருக்கும்?"

"ஆணா... இல்ல... பெண்ணா சேர் பிறந்தது...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துணிந்து செய்யுங்கள்

சிறியதோ, பெரியதோ வியாபாரம் என்று கால் வைத்து விட்டால் பிரச்சினைகளுக்குக் குறைவிருக்காது. அவரவர் போட்ட முதலுக்கேற்ப பிரச்சினைகளின் தன்மை மாறுபடுமே தவிர மற்றும்படி வியாபாரம் பற்றிய கவலை, பதற்றம் எல்லோருக்குமே இருக்கத்தான் செய்யும்.

பொதுவாக வியாபாரச் செய்திகளை வெளியிட முனையும்போது பெரும் வர்த்தகர்களையே அநேகமானோர் நாடுவதுண்டு. ஆனால் சிறு வியாபாரிகளுக்கிடையிலும் பல பயனுள்ள விடயங்கள் கிடைக்கக் கூடுமல்லவா? இப்படி நாம் நினைத்த போது முதலில் அகப்பட்டவர் கொழும்பு கொட்டாஞ்சேனை கல்பொத்த வீதியில் சிறிய பலசரக்குக் கடையை நடத்தி வரும் திரு.பிரபாகர் அவர்கள்.



"புது வருஷத்துக்கு வந்த உங்கட மாப்பிள்ளைக்கும் உங்களுக்கும் சண்டையாமே... என்னாச்சு?"

"புது வருஷத்துக்கு வாங்கின ராக்கட் வெடிகளை "நாசா"வில இருந்து தான் விடணும் என்டு அடம்பிடிச்சாரே...!"

"நான் ஐரோப்பிய நாடொன்றில் சில வருடங்கள் தங்கியிருந்தேன். அங்கு இரவு பகலாகக் கஷ்டப்பட்டு உழைத்தாலும் இங்கே இருக்கின்ற நிம்மதி, சந்தோஷம் அங்கே இல்லை. ஒரு கட்டத்தில் அந்த வாழ்க்கை ஒரேயடியாகக் கசந்து போக நானாகவே புறப்பட்டு வர முடிவெடுத்து வந்து சேர்ந்தேன்" என்று கூறிய பிரபாகரிடம், பலசரக்கு வியாபாரம் தொடங்கும் எண்ணம் ஏன் ஏற்பட்டது எனக் கேட்டபோது "இது தற்செயலாக நடந்த விடயம். நான் வெளிநாட்டில் இருந்து வந்திருந்தபோது தொழில் என்று எதுவும் இருக்கவில்லை. வெளிநாட்டில் உழைத்துக் கொண்டு வந்திருந்த சிறிதளவு தொகையும் கரைந்து போகக்கூடிய நிலை ஏற்பட்டது. தனிய இருக்கும்போதே நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா செலவாகிக் கொண்டிருந்தது. நேரமும் வீணாகக் கழிந்து கொண்டே போனது. சொந்த நாட்டிற்குத் திரும்பிய நாளிலிருந்து என்ன செய்யலாம் என்று சிந்தித்துக் கொண்டே இருந்தேன். அந்த நேரத்தில்தான் இந்த இடம் வாடகைக்கு இருப்பதாக அறிந்தேன். சிறிய இடம்தான். ஆனால் நான் இருக்குமிடத்திற்கு அருகில் இருந்தமை, பலசரக்குக் கடையொன்று தேவையான இடமாக இந்த இடம் காணப்படுகின்றமை போன்ற விடயங்களை அலசி ஆராய்ந்து இது பலசரக்கு வியாபாரத்திற்கு ஏற்ற இடமென்று தீர்மானித்தேன்" என்று சற்று விளக்கமாகவே பதில் தந்தார்.

பிற்பகல் இரண்டு மணியளவில் கடையை மூடும் பிரபாகர் மீண்டும் ஐந்து மணியளவில் திறக்கிறார். காலை ஆறு மணியிலிருந்து இரவு பத்து மணிவரை நடைபெறும் வியாபாரத்தில் வாடிக்கையாளர் வரவு மந்தமாக இருக்கும் இந்த இடைவெளியில் கடையை மூடி வீட்டுப் போய் சாப்பிட்டு வீட்டுக் குட்டித் தூக்கம் போடுகிறார் என்று நினைத்தால் அதுதான் இல்லை. அந்த நேரத்திலும் கணனி வகுப்பிற்குப் போகிறார். புத்தகங்கள் வாசிக்கிறார்.

**நேரில் கண்டோம்**

திரு. பிரபாகரின் கடைக்கு ஒருவர் சிகரட் வாங்க வந்திருந்தார். அவருடைய வயது 17அல்லது18 ஆக இருக்கலாம். பிரபாகர் "சின்னப் பையன்களுக்கு நான் சிகரட் விற்க மாட்டேன்" என்று வந்தவருக்கு சிகரட் விற்க மறுத்துவிட்டார். வந்தவர் விடாப்பிடியாக "எனது அடையாள அட்டையைப் பாருங்கள். எனது வயதின்படி சிகரட் புகைக்கலாம்" என்று அடையாள அட்டையை நீட்டினார். பிரபாகர் அதையும் பார்க்க மறுத்து சிகரட் தராமல் கடுமையாக எச்சரித்து அனுப்பிவிட்டார். யார் அகப்பட்டாலும் இருப்பதை விற்றுக் காசாக்கத் துடிக்கும் பலரின் மத்தியில் பிரபாகர் இவ்வாறு வித்தியாசமாக இருப்பதை நாம் நேரிலேயே கண்டதும் இவரைப் பேட்டி காணத் தீர்மானித்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுள் தனக்குப் பிடித்த வற்றைப்பற்றி சிலாகித்துப் பேசுகிறார். ஏற்கெனவே அறிவிப் பாளர் பயிற்சி நெறியொன்றையும் பூர்த்தி செய்திருக்கும் பிரபாகர், அந்தத் துறையிலும் ஆர்வமுடை யவராகக் காணப்படுகிறார். இவை போதாதென்று மோட்டார் வாகனம் திருத்தும் பயிற்சியையும் நிறைவு செய்திருக்கிறார்.

இவரிடம் வியாபாரம் எப்படி என்று கேட்டால் சந்தோஷமான பதிலே வந்து விழுகிறது. "நன்றாகவே போகிறது. நல்ல தரமான பொருட்களைத் தேடிப் பெற்று நியாயமான விலையில் கொடுப்பதால் மக்கள் தேடி வருகின்றனர். விற்கப்பட்ட பொருள் பழுதடைந்திருந்தால் எந்தவித தயக்கமும் இன்றித் திரும்ப வாங்கிக் கொள்கிறேன். வருபவர்களோடு எந்தச் சந்தர்ப் பத்திலும் சிரித்துப் பேசிப் பழகுவதால் நட்பு வட்டம் பெருகுவதாலும் வியாபாரம் பெருகுகிறது" என்று உற்சாக மாகப் பதிலளித்தார்.

இவ்வியாபாரத்தில் எதிர் நோக்கப்படும் பிரச்சி னைகள் பற்றிக் கேட்டால் "கடன் கொடுப்பது" என்று இரண்டே சொல்களில் ஆணியடிக்கிறார் பிரபாகர். "இவ்வாறான சில்லறை வியாபாரத்தில் கடன் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவது சகஜம்தான். மாதச் சம்பளம் பெறுபவர்கள் வெளிநாட்டு வருமானத்தை எதிர்பார்த் திருப்பவர்களுக்கு நாம் கடன் கொடுப்பது பேருதவியாக இருக்கலாம் எனக் கருதுவதால் கடன் கொடுக்கிறோம். என் றாலும் ஒருசிலர் தராமலே விடும்போது அது பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. குறிப்பாக வெளிமாவட்டங் களிலிருந்து வந்து நிரந்தரமற்ற வேலைகளில் இருப்போர், கடன் வாங்கிய நிலையிலேயே வேலைகளை விட்டுச் செல்லும் நிலை ஏற்பட்டால், தரவேண்டிய தொகையைத் தராமலே போய் விடுவார்கள். இவ்வாறான தொகைகள் சேர்ந்து பெருந் தொகைப் பணம் வருமதியாக உள்ளது. சிறுகச் சிறுக உழைத்துச் சேர்த்த இப்பணம் திரும்பக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை" என வேதனையுடன் கூறியவர் "யாருக் காவது இவ்வாறான வியாபாரம் செய்யும் நோக்கம் இருந்தால், ஆரம்பத்திலிருந்தே கடன் கொடுக்காமல் வியாபாரத்தைக் கொண்டு செலுத்துவதே நல்லது. அது சாத்தியப்படுமா என்பது சந்தேகம்தான். கடன்



கொடுக்கும் நிலை ஏற்பட்டால், ஆழமறிந்து காலை விட வேண்டும்" என அறிவுரையும் வழங்கினார்.

"பல இளைஞர்கள் வெளிநாடு போவதற்கென்று வந்து முயற்சி கைகூடாமல், எந்தவித தொழிலோ படிப்போ இல்லாமல், நேரகாலத்தை வீணடித்துக் கொண்டு பெற்றோர் அல்லது சகோதரர்கள் கொடுக்கும் பணத்தில் நாட்களை நகர்த்து கிறார்கள். இவர்களுள் நான் வெளிநாடு போவதற்கு முன்பே இங்கே நின்றவர்கள் கூட அடங்குகிறார்கள். இவர்கள் நினைத்தால் சிறிய அளவி லாவது ஒரு வியாபாரத்தைத் தொடங்கி நடத்த முடியும். அது அனுபவத்துடன் வருமான த்தைத் தருவதோடு நேரத் தையும் விரயமாகாது தடுக்கும். அப்படிச் சிந்தித்தபடியால்தான் இப்படி ஒரு வியாபாரத்தை வெற்றிகரமாகக் கொண்டு நடத்த முடிகிறது. பணம் என்று குறிப்பிட்டுக் கூற கையில் பெரியளவில் இல்லாவிட்டாலும் தொழில் இருக்கிறது. அது தரும் நம்பிக்கை இருக்கிறது. வாழக்கை மகிழ்ச்சியாக இருக்கிறது" என்று நதி சஞ்சி கையூடாக இளைஞர் சமூகத் திற்கு வேண்டுகோள் விடுத்த பிரபாகர், "சரிங்கண்ணா நேர மாச்சு கடை திறக்க வேணும்" என்று விரைய நாமும் விடை பெற்றோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# விதி வரைந்த பாதை

திருமதி சுபாஜினி சந்திரகுமார்
கொழும்பு 06





**அஸ்வினியின் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தது. அம்மாவை அப்படி ஏசியிருக்கக் கூடாது தான். எப்ப பார்த்தாலும் கல்யாணம் கட்டு என்று நச்சரித்தால் கோபம் வராமல் வேறு என்னதான் வருமாம்.**

வேண்டாம் என்றால் விட வேண்டியது தானே. கல்யாணம் என்பது என் வாழ்க்கையிலே வெகு தொலைவில் தொலைந்து போன ஒரு விடயம். இது எங்கே அம்மாவுக்குப் புரியப்போகிறது என்று அவள் மனம் ஏதேதோ நினைத்துத் தத்தளித்துக் கொண்டிருந்தது. அந்த வேளையில் ''சித்தி இங்கேயா இருக்கிறீர்கள். நான் எங்கே எல்லாம் உங்களைத் தேடுகிறது. ரீவியில் உங்கள் டான்ஸ் புரொக்கிறாம் தொடங்கியிருக்கும். வாங்கோ சித்தி வீட்டுக்குப் போவோம்'' என்று மழலை மொழியில் கெஞ்சி அஸ்வினியின் கைகளைப்பிடித்து இழுத்தாள் பக்கத்து வீட்டில் குடியிருக்கும் நிகாரா. அந்த மழலையின் குரல் கேட்டு நொடிப் பொழுதில் தன் உள்ளத்துச் சுமைகளை மறந்து நிகாராவை தோளில் போட்டுக் கொண்டு வீடு நோக்கி நடை போட்டாள் அஸ்வினி.

தந்தையின் அன்பு அறியாமல் அன்னையின் அரவணைப்பில் வளர்ந்த அஸ்வினி இயற்கையிலேயே நல்ல அழகுதான். அகன்ற கயல்விழிகள், மேகம் போல் கருங் கூந்தல், குவிந்த அதரம், பார்ப்பவரை மயங்க வைக்கும் உருவம். அந்த இதழ்களின் ஓரத்தில் ஒரு குறுஞ்சிரிப்பு என எழில் நிறைந்த அஸ்வினி ஓர் நடன ஆசிரியை. அவள் கற்பிக்கும் பாடசாலையில் தான் கணனி கற்பிக்கும் ஆசிரியராக இருந்தான் கைலாஸ். அஸ்வினிக்கு மேத்தாவின் கவிதைப் புத்தகம் என்றால் அலாதிப் பிரியம். அன்றும் அப்படித்தான். நூலகத்தில் தனக்கு ரொம்பவும் பிடித்த மேத்தாவின் கவிதைப் புத்தகத்தைத் தேடிக் கொண்டிருந்தாள் அஸ்வினி. ''ஹலோ அஸ்வினி இந்தாங்கோ நீங்கள் தேடிய புத்தகம் என்று கைலாஸ் மேத்தாவின் கவிதைப் புத்தகத்தை நீட்டினான். ''ஓ ரொம்ப கஷ்ரப்பட்டு தேடி எடுத்திட்டீங்க. தாங்ஸ் கைலாஸ்'' என்ற அஸ்வினியை கண்ணுக்கு எட்டிய தூரம் சென்று மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த கைலாஸின் தோளில் ஒரு கைவிழ திரும்பி அவன் பார்க்க நண்பன் சுதன் சிரித்த வண்ணம் ''என்ன மச்சான் பார்த்தாச்சா. இப்படியே ஏக்கப் பார்வை பார்த்தே காலத்தைக் கடத்து. அவ வெடிங் காட் கொண்டு வந்து தருவா. நீ போய் விஷ் பண்ணிட்டு வா'' என்ற சுதனை அவசரமாக இடையில் மறித்த கைலாஸ் ''டேய் உன்ர வாயில நல்லதே வராதா. என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?'' என்றவனிடம், ஆ இது நல்ல கேள்வி அப்படி வா'' வழிக்கு. நேரில போய் விஷயத்தைச் சொல்றது. அப்புறம் லெட்டர் கொடுக்கிறது. அது எல்லாம் அசிங்கம். உன்ர வயசுக்கும் ஒத்து வராது. ம்.... பேசாமல் அவாவின்ர அம்மாவிடம் போய் கதைச்சுப்பாரு. அதெல்லாம் சரியா வரும் மச்சான். நான் போயிட்டு வாறன்'' என்று சுதன் போக, வீட்டுக்கு வந்த கைலாஸிற்கு அன்று இரவு தூக்கமே வரவில்லை. வானத்து விண்மீன்களை இரசித்துக் கொண்டே உள்ளத்தில் தேங்கிக் கிடக்கும் ஆசைகளை எண்ண ஓட்டத்தில் கொட்டிக் காதல் கனவுக்குள் உறங்கிப் போனான்.


அடுத்த நாள் காலையில் சுதன் சொன்னது போலவே கைலாஸ் தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பனிடம் பேசி அஸ்வினியின் தாயிடமும் திருமணத்திற்குச் சம்மதம் வாங்கி விட்டான். கல்யாண நாள் குறித்து விட்ட குஷியில் அஸ்வினியுடன் பேசிக் கொண்டிருந்தான். ஆனால் அவளோ மனதிற்குள் "ம்... இந்தக் கல்யாணத்திற்கு என்னைச் சம்மதிக்க வைக்க அம்மா பட்ட பாடு இவருக்கு எங்கே தெரியப் போகிறது" என்று மனதிற்குள் எண்ணினாள். சிந்தனை ரேகைகள் படர்ந்து கிடந்த அஸ்வினியின் முகத்தைப் பார்த்த கைலாஸ் "என்ன அஸ்வினி கல்யாணக் கனவா. இந்தக் கல்யாணத்திலே உங்களுக்குச் சம்மதம்தானே?" என்று கேட்டான். அஸ்வினி என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டே "என்னைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்" என்று



"கண்ணி" வெடியின் ஆண்பால் பெயர் என்னவாக இருக்கும்?

"கண்ணன்" வெடி...

கேட்டவளைப் பார்த்துச் "சிரித்துக் கொண்டே ஓ தெரியுமே. அழகான டான்ஸ் ரீச்சர். என்னைக் கல்யாணம் செய்யப் போகிறவா. இதைத்தவிர வேற விஷயங்கள் இருக்கும். நீ சொல்லு அஸ்வினி நான் கேட்கிறேன்" என்றவனை வேதனை விழிகளோடு நிமிர்ந்து பார்த்த அஸ்வினி இவனுக்கு வேடிக்கை, எனக்கு வேதனை என்று எண்ணியவாறு பெருமூச்சுடன் அவள் தனது கடந்த கால அமாவாசை நினைவுகளை மெல்லப் புரட்ட ஆரம்பித்தாள்.

அப்போது அவள் கவின்கலை அக்கடமியில் நடனக் கலை படிக்கும் இளஞ்சிட்டு. கவலை என்றால் என்னவென்று தெரியாத வெள்ளி மயில் அஸ்வினியின் பரத நாட்டிய அரங்கேற்றம். இளம் தென்றல் வீசும் அந்தி மாலைப் பொழுதினிலே அரங்கேறியது. அவளின் அழகிலும் அபிநயத்திலும் அப்படியே சொக்கிப் போனான் ரோகித். அவளை எப்படியாவது பாராட்ட வேண்டும் என்ற உத்வேகத்தில் மண்டபத்திற்கு வெளியே காத்திருந்து அஸ்வினி வருவதைப் பார்த்ததும் "ஹலோ அஸ்வினி என்பெயர் ரோகித். தப்பா நினைக்க வேண்டாம். உங்கட டான்ஸ் புரோகிராம் பார்த்தனான். ரொம்ப நல்லா இருந்தது. பாராட்ட வேண்டும் என்று மனது அடம் பிடித்தது. அதுதான்... என்று இழுத்த ரோகித்தைப் பார்த்து சிரித்துக் கொண்டே "ஓ அப்படியா?" என்ற ஒற்றைச் சொல்லுடன் அவனைக் கடந்து சென்றாள் அஸ்வினி.



## வாழ்க்கைச் செலவு

*செலவுகளில் கட்டுப்படுத்துவதற்குக் கஷ்டமானது தண்ணீர்ச் செலவுதான். இதிலும் திட்டமிட்டு நடந்து கொண்டால் சிக்கனப்படுத்தலாம். ஒவ்வொரு நாளும் நீர்மானியைக் கணக்கிட்டு எழுதிக்கொண்டே வரவேண்டும். அதில் சராசரியைக் கண்டு குறிப்பிட்ட அளவுக்கு மேல் பாவனை செல்லாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒரு மாதத்தில் ஒருவருக்கு 7 அலகுகளுக்கு மேல் பாவனை அளவு இருக்கக்கூடாது. உடைகளை உடனுக்குடன் கழுவுவது வசதியானதுதான் என்றாலும் சேர்த்து வைத்துக் கழுவும்போது ஓரளவிற்குத் தண்ணீரைச் சேமிக்க முடியும்.*

*திருமதி. ஆர். இந்திரா*
*இல்லத்தரசி,தெஹிவளை*

அன்று நடந்த சிறு அறிமுகத்தின் பின் நடன நிகழ்ச்சி களின் காரணமாகவே அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டது. அந்தச் சந்திப்புக்கள் ஊடாக அஸ்வினி ரோகித்தைப் பற்றி நிறையத் தெரிந்து கொண்டாள். தாயின் அரவணைப்பு இல்லாமல் கடல் தொழில் செய்யும் தந்தையின் நிழலில் வளர்ந்தவன். வீட்டின் கஷ்டத்தின் நிமித்தம் படிப்பைப் பாதியில் நிறுத்தித் தன் நண்பனின் உதவியுடன் யாழ் நகரை வீட்டு மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்புக்குச் சென்றான். நகரத்தின் ஓர் கடையில் வேலை பார்க்கும் ரோகித்துக்கு இரண்டு தங்கைமார்கள். எப்போதும் வெளிப் படையாகப் பேசும் சுபாவம் என எல்லாமே அஸ்வினிக்குப் பிடித் திருந்தது. அந்தப் பிடிப்பில் அன்பு அரும்ப அதனை இதயத்திற்குள் பத்திரப்படுத்திக் கொண்டாள். நாட்கள் செல்லச் செல்ல காதலைச் சொல்லத் தவித்த இதயங்களின் பொறுமை கட்டவிழ கண்களின் புணர்ச்சியிலே காதல் குழந்தை பிறந்தது. பார்க்கின்ற பார்வையிலே பாதங்களும் தடுமாறி இதயங்கள் இடமாறிக் கொண்டன.

வழமை போல அன்று ரோகித்தின் முகத்தில் திரை வீழுந்திருந்தது. அவளுடன் எதுவும் பேசாது சோகமே உருவாக அமர்ந் திருந்தான். அவன் கண்கள் தொலை தூரத்தே வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தன. இதனை அவதானித்த அஸ்வினி "என்ன இண்டைக்கு முதலாளிட்ட நல்லா வேண்டிக் கட்டிட்டீங்களாக்கும்" என்று கேட்டுச் சிரித்த அஸ்வினியின் சிரிப்பில் கலந்து கொள்ளாத ரோகித் "பச்... அது ஒன்றும் இல்லை. அப்பாவுக்கு உடம்பு சரியில்லையாம். வேலையை விட்டுட்டு யாழ்ப்பாணம் வரட்டாம். தங்கச்சி லெட்டர் எழுதியிருக்கிறாள்" என்று ரோகித் சொன்னதைக் கேட்டதும் பதறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன அஸ்வினி "அப்போ நீங்கள் போகப் போறீங்களா. வேலையை விட்டுட்டு யாழ்ப்பாணம் போய் என்ன செய்யப் போறீங்கள்" என்று அவளின் வாடிய வார்த்தைகளைக் கேட்டு ரோகித்தின் கண்களில் கண்ணீர் திரையிட "கடற்தொழில்தான் செய்யப் போகிறேன். உயிருக்கு உத்தரவாதம் இல்லாத தொழில்" என்று வேதனை யுடன் கூறிய ரோகித்தின் உள்ளம் அலைகடலிலே புயல் வீசியது போலக் கொந்தளித்தது. ஒரு பெருமூச்சுடன் மீண்டும் தொடர்ந்தான் ரோகித். "உன்னை விட்டுப் போறது என்பது மனதிற்குப் பெரும் வேதனையா இருக்குது. ஆனால் வேறு வழியில்லை. நான் கட்டாயம் யாழ்ப்பாணம் போய்த்தான் ஆக வேண்டும். காதலுக் காகப் பெற்றவர்களை என்னால் ஒதுக்க முடியாது. இரண்டு தங்கை மாரைக் கரைசேர்க்கும் பொறுப்பு எனக்கு இருக்குது. அப்பா எங்களை வளர்க்க எவ்வளவு கஷ்ரப்பட்டவர். எனக்குக் கடமைதான் பெரிது. அதற்காக உன்னை நான் கைவிட மாட்டேன். சந்தர்ப்பம் கிடைத்தால் உன்னை வந்து பார்பேன். கவலைப் படாதே அஸ்வினி. லெட்டர் போடுறன்" என்ற ரோகித்திற்கு பிரிவுத் துயரம் கண்ணீரை வாரி இறைத்தது. வார்த்தைகள் தடைப்பட்டு இருவரி னதும் உடைந்து போன இதயப் பிரதேசம் பிரியாவிடை பெற்றது.

அதன்பின் ஊருக்குப் போன ரோகித் தகப்பனின் உயிரற்ற உடலைத்தான் பார்த்தான். இதயம் நிறைந்த சுமைகளுடன் இறுதிக் கிரியைகளை முடித்த ரோகித் முழு மூச்சுடன் கடற்றொழிலில் ஈடுபட்டான். தங்கைகளின் எதிர்காலத்திற்காக அயராது உழைத்தான். என்றாலும் பழைய நிலைமைக்குத் திரும்ப முடியாமல் அவனது மனம் பரிதவித்தது. நம்ப முடியாத கனவுகள் போலவே எல்லாம் நடந்து முடிந்து விட்டது. அவன் கடல் அலைகளுடன் இருந்தாலும் அவனின் மூச்சு,சிந்தனை அனைத்திலும் அஸ்வினி நிறைந்தி ருந்தாள். இதனால் முகத்தில் புன்னகையைத் தொலைத்து விட்ட ரோகித்துக்குப் பிரிவுத் துயரம் பிறையாகத் தெரிவதால் வேதனையின் விசும்பல்களினால், இமைகள் கூட கண்ணுக்குள் சுமையாகி விழியின் பார்வைக்குக் கண்ணீர்த் துளிகள் தடைபோட்டன.

இப்படியே ஆறு மாதங்கள் கடந்து விட்டன. அஸ்வினிக்கு ரோகித்திடம் இருந்து கடிதங்கள் வருவது நின்று விட்டிருந்தது. அதன் பின்புதான் கடலுக்குப் போன ரோகித் திரும்ப வரவில்லை என்ற செய்தியை அறிந்த அஸ்வினிக்கு உலகமே இருண்டு போனது. இப்படியே பல வருடங்கள் போன பின்பு இப்பொழுது அஸ்வினியின் வாழ்க்கையில் கைலாஸ் வந்தவுடன் அவனை ஏற்கமுடியாமல் அவள் மனம் முரண்டு பிடித்தது. அவளின் கதையைக் கேட்ட கைலாஸ் சிறுமுறுவலுடனே "இதுவரை உன்னை நான் நேசித்ததை விட இப்போ நான் அதிகமாக நேசிக்கிறேன். நல்ல ஒரு வாழ்க்கைத் துணையாய் உனக்கு நான் இருப்பேன்" என்ற கைலாஸின் வார்த்தைகளைக் கேட்ட அஸ்வினி விம்மலுடன் "முடியுமா கைலாஸ்? உங்களால் முடியுமா. என்னை முழுமனதுடன் ஏற்றுக் கொள்ள உங்களால் முடியுமா? நேசிக்க முடியுமா? என்று கேள்விக் கணைகள் தொடுத்தவளிடம் "முடியும் அஸ்வினி நிறைவேற முடியாத ஆசைகளை நினைத்து வேதனைப்படுவதில் அர்த்தமே இல்லை. புரிந் , தான்



வாழ்க்கை. அது இல்லாவிட்டால் வாழ்வதில் பிரயோசனம் இல்லை. காதலித்தவங்களே திருமணம் முடிக்க வேணும் என்றால் இந்த உலகத்திலே கல்யாணமே நடக்காது. அதனாலே அஸ்வினி வாழ்க்கையின் யதார்த் தத்தைப் புரிந்து கொள். உன்னை நான் முழு மனதுடன் ஏற்றுக் கொள்கிறேன்". கைலாஸின் உண்மையான அன்பின் உறுதி மொழி கேட்டு சிலையாய் உறைந்து போன அஸ்வினியின் கண்களில் பொங்கிய கண்ணீர் தடைப்பட புன்முறுவல் பூத்தாள்.

நாட்கள் வாரங்கள் ஆயின. அன்று ஒரு காலைப் பொழுதில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த கைலாஸிற்கு மின்னல் தாக்கிய தைப்போல் இருந்தது. அதற்குக் காரணம் பத்திரிகையில் காணப்பட்ட ஒரு செய்தி. கைது செய்யப்பட்ட மீனவர்கள் விடுவிப்பு என்ற செய்தியில் வெளிவந்திருந்த பெயர்ப் பட்டியலில் ரோகித் யாழ்ப்பாணம் என்ற பெயரைப் பார்த்ததும் தலைசுற்றியது. இது அஸ்வினி சொன்ன ரோகித்தாக இருக்குமோ என்ற எண்ணம் நெஞ்சுக்குள் ஆயிரம் குதிரைகள் ஓடுவது போல் இருந்தது. அது அதே ரோகித்தாக இருந்தால் என்ன செய்வது. ம்..... எதற்கும் நாளை போய் பார்போம். என்று அன்றைய நாளைக் கொஞ்சம் ஆறுதல்படுத்தினான் கைலாஸ்.

மறுநாளே மீனவர்களை விடுவிக்கும் முகாமிற்கு அருகில் நின்று கொண்டு வெளிவருபவர்களை நோட்டமிட்டான் கைலாஸ். அங்கே அதோ அஸ்வினி போட்டோவில் காட்டிய அதே முகம். முகத்தில் நிறையத் தாடி வளர்ந்து உருவமே மாறிப் போயிருக்கும் அது ரோகித்தான் என மனதிற்குள் எண்ணியவாறு ரோகித்தின் அருகில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன கைலாஸ் "ஹலோ றோகித் என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனால் உங்களை எனக்குத் தெரியும். உங்களுடன் கொஞ்சம் பேச வேண்டும்" என்ற கைலாசை றோகித் கேள்விக் குறியுடன் பாத்தவாறு "என்னோடயா?" என்று கேட்டுத் தயங்கினான். ஓம் அஸ்வினியின் விஷயமா கதைக்க வேணும் என்று கைலாஸ் கூறியதும் சிந்தனையோடு வந்தான். இருவரும் ஒதுக்குப்புறமான இடத்திற்குச் சென்றதும் கைலாஸ்தான் முதலில் பேச்சை ஆரம்பித்தான்.

"அது வந்து றோகித் நீங்கள் விரும்பின அஸ்வினி நான் படிப்பிக்கிற ஸ்கூல்லதான் டான்ஸ் ரீச்சராக இருக்கிறா. உங்களை விரும்பின கதை எல்லாவற்றையும் எனக்குச் சொன்னவா. உங்களைப் பார்த்தா அஸ்வினிக்கு நல்ல சந்தோஷமாயிருக்கும். உங்களைக் கூட்டிக்கொண்டு போகத்தான் வந்தனான்" என்றான் கைலாஸ்.

அவனைக் கூர்ந்து நோக்கிய றோகித் "அஸ்வினிக்குத் திருமணம் நடக்க இருக்கிறது அறிஞ்சன்". எனத் தெளிவாகக் கூறியபோது அவனை வியப்புடனும், அதிர்ச்சியுடனும் பார்த்த கைலாஸ் சோதனைகளிலிருந்து மீண்டு வந்திருக்கும் அவனிடம் எதையும் மறைக்கக் கூடாது என்று கருதி "உண்மைதான். அவாவை நான்தான் விரும்பினான். ஆனால் அஸ்வினி என்னை விரும்பவில்லை. நான் முழுமனதோட ஏற்றுப் புரிந்துணர்வோடு வாழ்வேன் என்று உறுதியளித்தபடியால் சம்மதம் சொன்னா. ஆனால் இப்ப நீங்கள் வந்திட்டீங்கள். நான் விலத்திப் போறதுதான் சரி. நியாயமும் கூட. சொல்லுங்க றோகித்" என்றான் கைலாஸ்.



"மகளுக்கு மனோவியாதி வந்திட்டுது போல....?"
"என்ன பிதற்றுகிறீங்க?"
மகள் தூக்கத்தில் மனோ... மனோ... என்று பிதற்றுகிறாளே....?

றோகித் "இதில் நான் சொல்ல என்ன இருக்கு?". என்றவனிடம் "இல்லை றோகித் நல்ல முடிவா சொல்லுங்கோ. அஸ்வினி உங்களுக்குரியவள்" என்ற கைலாசை இடைமறித்த றோகித் "என்ன விசர்க்கதை கதைக்கிறீங்கள். அஸ்வினியைப் பொறுத்தவரை என்ர உருவம் அவ மனதில் கலைந்து போன மேகம். நான் இருந்த இடத்தில் இப்ப நீங்கள் இருக்கிறீங்கள். இனித் திரும்பவும் அத [illegible]துள் நான் வந்தால் அஸ்வினியின் மனம் மிகவும் கஷ்ரப்படும். உண்மையா நேசித்த உள்ளத்தைக் குழப்பக் கூடாது. அப்படிக் குழப்பினால் அது உண்மையான காதலாக, அன்பாக இருக்காது. நான் உண்மையாக, உயிராக அஸ்வினியை நேசித்தேன். அவ சந்தோஷமாக இருக்க வேண்டும். அதுவே எனக்குப் போதும். நான் இருக்கும் சுவடே அஸ்வினிக்குத் தெரியக்கூடாது" என்றவனை மீண்டும் இடைமறித்த கைலாஸ் "இல்லை றோகித் நீங்கள்..." என்று ஏதோ சொல்ல வந்தவனைப் பேசவிடாமல் "இல்லை நீங்கள் ஒன்று[illegible] சொல்ல



## வாழ்க்கைச் செலவுகள்

இன்று வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. மக்களின் வருமானமோ பெருமளவில் அதிகரித்ததாகத் தெரியவில்லை. இந்நிலைக்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும், யார்மீது பழி சுமத்தினாலும் மக்கள் வாழ்க்கைச் செலவு எனும் பாரிய சிக்கலை எதிர்நோக்கியே ஆகவேண்டிய நிர்ப்பந்தத்தில் உழல்கின்றார்கள். அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுகளுக்கு எப்படி முகம் கொடுக்கிறீர்கள் என்று சிலரிடம் கேட்டோம். அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன.

நேர் கண்டவர் **பிரியதர்ஷினி**

வேண்டாம் கைலாஸ் என்ர முடிவு இதுதான். இப்ப என்னால அஸ்வினிக்கு நல்லதொரு வாழ்க்கையைக் கொடுக்க முடியாது. இனி என்ர வாழ்க்கை இலட்சியங்கள் எல்லாம் மீனவ சமுதாயத்தோடதான் கழியப் போகுது. இந்த சமாதானமும் குழம்பின படியால் எங்கள் மீனவர்கள் படுந்துயரம் சொல்ல முடியாது. நாங்கள் அன்றாட வாழ்க்கைக்கே திண்டாடிறோம். இந்த 2007ம் ஆண்டு சித்திரை வருடப் பிறப்பிலயாவது எங்கள் மீனவ சமுதாயத்திற்கு நல்லதோர் வாழ்க்கை கிடைக்குதா எண்டு பார்ப்பம். இந்த சித்திரை வருடப்பிறப்போட உங்கட புது வாழ்க்கையும் சந்தோஷமாக அமைய வாழ்த்துக்கள். சரி கைலாஸ் நான் போயிட்டு வாறன்" என்ற றோகித்தின் வார்த்தைகளைக் கேட்டு வியந்து போன கைலாஸ் அவன் போகும் திசையையே பார்த்துக் கொண்டிருந்தான். அது விதி வரைந்த பாதை என்பது அவனுக்கு நன்றாகவே புரிந்தது.

நாங்கள் வாடகை வீட்டில் இருக்கிறோம். இரண்டு வருடத்திற்கு ஒரு தடவை வீடு மாற வேண்டியுள்ளது. எமது குடும்பத்தில் நான்கு பேர் மட்டுமே உள்ளதால் எமக்கு அளவான விதத்தில் சிறிய வீட்டைக் குறைந்த வாடகையில் பார்க்கிறோம். வாடகை வீட்டில் இருப்பவர்கள் அதிகமான வீட்டுப் பொருட்களை வாங்கிக் குவிக்கக் கூடாது. சிலவேளை சற்றுச் சிறிய வீட்டில் குடியேற வேண்டி ஏற்பட்டால் பொருட்களை வைக்கவே திண்டாட வேண்டி வரும். சிலர் பொருட்களுக்காகவே பெரிய வீடு எடுக்க வேண்டிய நிர்ப்பந்த்திற்குள் அகப்பட்டுத் தவிப்பார்கள். இவற்றைத் தவிர்த்து அளவோடு வாங்கி மகிழ்வோடு வாழ்வதே சிறந்தது.

**திரு கோணேஷ்**
அரசாங்க உத்தியோகத்தர்
வத்தளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரை விமர்சனம்

# மாயக்கண்ணாடி



சேரனின் முத்திரையுடன் மீண்டும் ஒரு தமிழ்த் திரைப்படம். காதலர்களான சேரனும் நவ்யா நாயரும் தமது நடுத்தர நிலையையும் மீறி இலகுவில் சாத்தியமாகாத கனவுகள் காண்கின்றனர். அவற்றை நனவாக்க முயன்று தோல்வியுற்று வாழ்க்கையின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதுதான் கதை. அதைச் சொல்லிய விதம் வித்தியாசம். ராதாரவிக்குச் சொந்தமான அழகுக்கலை நிலையத்தின் ஊழியர்களாக சேரன் நவ்யா. கையில் சொற்பளவு பணத்தை வைத்துக்கொண்டு விடுமுறை நாளைச் சந்தோஷமாகக் கழிக்க முயன்றும் முடியாமல் போவதில் தொடங்குகிறது படம்.


விரைவாகப் பணம் சம்பாதிக்கும் நோக்கில் இருந்த வேலையையும் இழக்கும் இன்றைய இளைஞர்களின் போக்கை நன்றாகவே நாடி பிடித்து சேரன். நவ்யா பாத்திரங்களில் இளைஞர்களுக்கான தீப்பந்தத்தைக் கொளுத்தியிருக்கிறார்கள். அவர்களின் கனவுகள் கற்பனைகள் பெரிதாக இருந்தாலும் அதை நோக்கிச் செல்ல அவர்கள் படும்பாடு. போகும் வழி கதையை நகர்த்துகிறது. எல்.ஐ.சி ஏஜன்ட் என்ற நிலையில் இருக்கும்போது மோட்டார் சைக்கிளுக்கு ஆசைப்படுவதும். அதுவே அரசியல்வாதி சம்பந்தப்படும்போது காருக்கு மாறுவதும் நல்ல கற்பனை. அதுபோல் வாழ்க்கையில் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறியவர். முன்னேறிக் கொண்டிருப்பவர். முன்னேறத் துடிப்பவர் ஆகியோருக்கிடையிலான முடிச்சும் அருமை. அதை இறுதிவரை பாதுகாத்ததும் திறமை.

*சேரன் அவர்களுக்கு.*

"மாயக்கண்ணாடி" படத்தை மூன்று மணித்தியாலத்திற்கு மேல் எடுத்திருக்கிறீர்கள். ஏற்கனவே "தவமாய் தவமிருந்து" படத்தையும் இதே போலவே மூன்று மணித்தியாலத்திற்கு மேல் எடுத்து எமது கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டீர்கள். அது தெரிந்தும் மீண்டும் அதே தவறைச் செய்திருக்கிறீர்கள். உங்கள் எடிட்டர்களைத் தாலாட்டுப் பாடி தூங்க வைத்து விட்டீர்களா? இரண்டரை மணித்தியாலப் படம் என்றால் ஒரே சீ.டியில் ஒருவாறு சமாளித்து அடித்து விற்று விடுவோம். மூன்று மணித்தியாலப் படம் என்றால் எப்படியும் இரண்டு சீ. டிக்கள் தேவைப்படும். இது எமக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்தும். எனவே எமது பிழைப்பைக் கெடுக்கின்ற வேலையை மீண்டும் மேற்கொள்ளாது எம்மைப் பற்றியும் கொஞ்சம் யோசித்து எந்தக் கதையாக இருந்தாலும் சமாளித்து இரண்டரை மணித்தியாலத்திற்குள் முடிக்கும்படி வேதனையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

திருட்டு வீ. சீ. டிக்காரர்கள்





சரியாகச் சென்று கொண்டிருந்த கதையில் கடத்தல்காரர் ஒருவர் நுழைந்ததும் வழக்கமான மசாலாப் பாணிக்குத் திரும்புகிறது. ஆனாலும் கதைக்குத் தேவைதான் என்பதால் அரை மனத்துடன் ஏற்றுக் கொள்ளலாம்.

ஆயுள் காப்புறுதி விற்போர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள். அவமானங்கள். காட்டப்பட்ட விதமும் குறிப்பிடக் கூடியது. மேலதிகாரிகள் முகவர்களைக் கவர்ந்திழுக்கக் கூறும் ஆசை வார்த்தைகள். முகவர்களின் மாதாந்த இலக்கு. விற்பனை மதிப்பீடு (evaluation), விளக்கமளிக்கும்போது வாடிக்கையாளர் கவனமெடுக்காமல் இருப்பது போன்ற காட்சிகள் தத்ரூபமானவை. உண்மையில் நடப்பவை. படம் பார்க்கும் காப்புறுதி முகவர்கள் ஏற்று நெளியத்தான் செய்வார்கள்.

சினிமாவில் நடிக்க வாய்ப்புத் தேடும் இளைஞர்களின் நிலையைக் கூறும்போது திரையுலகின் மறுபக்க மாயைகளைக் கண்ணாடி போலப் போட்டு உடைத்திருக்கிறார் சேரன். கோடம்பாக்கத்துக்காரர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்களா?

படத்திற்குப் பெரிய பலம் நவ்யாவின் நடிப்பு. குழந்தை முகத்துடன் வந்து சிரித்து அம்மணி வெளுத்து வாங்குகிறார். "நான் நடிகனாகப் போகிறேன்" என்று சேரன் சொன்னதும் 'புப்' என்று சிரிக்கும்போது நம்மையும் சிரிக்க வைக்கிறார். சேரன் நடிகனாக வேண்டுமென்பதற்காக தயாரிப்பாளரின் மனைவியின் காலைப் பிடிக்கும்போது நெகிழ வைக்கிறார். சேரனைத் திருமணம் செய்வதற்காகத் தந்தையிடம் கதறும்போது கண்களைப் பனிக்க வைக்கிறார். நவ்யா 'நச்'யா. சேரன். ராதாரவி மற்றும் எல்லோருமே உணர்ந்து நடித்திருக்கிறார்கள். நகைச்சுவைக்கு என்று தனியே யாரும் இல்லை. அதில் பெரும்பங்கை சேரன் நவ்யா கூட்டணியே நிறைவேற்றி விடுகிறது.

இசை இளையராஜா என்பது இடைக்காலப் பாடல்களின் பாதிப்பிலிருந்தே தெரிகிறது. 'ஒரு மாயலோகம்...' பாடல் வரவேற்புப் பெறும். அதில் பொருட்களின் விலைகளைப் போட்டுக் காட்டியமை புதுசு. 'ஏலே எங்கே வந்தே' பாடல். நடனம் உடைகள் எல்லாம் பாக்கியராஜ் காலத்தை நினைவுபடுத்துகின்றன. பின்னணி இசையிலும் குறையில்லை.

பின்னணிக் காட்சிகளை வைத்தே பல விடயங்களைப் புரியவைத்து விடுகிறார்கள். உதாரணமாக நண்பரின் தேனீர்க்கடை வளர்ச்சியைக் கையாண்ட விதம். ராதாரவி முடிதிருத்துபவராக இருந்தாலும் சாதாரணமானவர் இல்லை என்பதைக் காட்ட மகன் பாடசாலைக்குப் போதல். வேலைக்காரர் நாயைக் கொண்டு செல்லுதல் போன்ற பின்னணிக் காட்சிகள் குறிப்பிடக் கூடியவை.

ராதாரவி இறுதியில் பேசும் நீண்ட வசனத்தை சற்றுச் சுருக்கியிருக்கலாம் சினிமா வாய்ப்புத் தேடிய வயதானவர் பேசிய வசனத்தைப் போல. சேரன் கொஞ்சம் உஷாராக வேண்டும். ஆட்டோகிராப். தவமாய்த் தவமிருந்து ஆகியவற்றிற்கு அடுத்த நிலையில்தான். இப்படத்தைக் கருத முடியும். ஒரு காட்சியிலுள்ள நிறைவற்ற தன்மை சேரனின் கம்பி போன்ற தலைமுடி போன்றவற்றைத் தவிர்த்துப் பார்த்தால் சேரனின் மாயக்கண்ணாடி மயக்கும் கண்ணாடிதான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் உயிரினும் மேலான..

**கலைஞர் மு.கருணாநிதி**

'கடவுளைப் போலத்தான் காதலும்! உண்டா இல்லையா என்பதை எந்தத் தர்க்கமும் முடிவு செய்ய முடியாது' என்று என் மகள் கனிமொழி, ஜூனியர் விகடனில் எழுதியதைப் படித்துப்பார்த்துக் கொண்டும் - என் பேரன்களும் பேத்திகளும் சாதி பேதச் சுழல்களைத் தாண்டி நின்று காதல் திருமணங்கள் செய்து கொண்டதை வாழ்த்திக் கொண்டும் - கொள்ளுப்பேரன் கொள்ளுப் பேத்திகளைக் கொஞ்சிக் கொண்டும் இருக்கின்ற இந்த வயதில் நீயும் கொஞ்சம் காதல் படிக்கட்டுகளில் ஏறிடுக என்றால் இது ஒரு வேடிக்கைதானே! 'இதில் என்னய்யா வேடிக்கை இருக்கிறது?' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் 'முதியோர் காதல்' புத்தகம் வீட்டு நூலகத்திலிருந்து எட்டிப் பார்த்துச் சிரிக்கிறது. அதுவும் ஓர் அழகின் சிரிப்புதானே!



வயது எண்பதை நெருங்கிக் கொண்டிருக்கிற நெல்சன் மண்டேலா, ஒரு நடுத்தர வயது மங்கையைக் காதலித்துக் கட்டித்தழுவும் படங்கள் ஏடுகளை அலங்கரிக்கும் இந்தக் காலத்தில், நான் காதலைப் பற்றி ஒரு கட்டுரைதானே எழுதுகிறேன். எனவே, என் கொள்ளுப் பேரர்களும் பேத்திகளும் கோபித்துக்கொள்ள மாட்டார்கள்!

'காதல் படிக்கட்டுகள்' எனும் தலைப்பில் வந்து கொண்டிருக்கும் தொடரில் நான் எழுதுகிறேன் என்றதும் வாசகர்கள் ஒரு வசீகர நடையை -வண்ணத் தமிழ் நடையை - சுவை மணக்கும் நடையை - மனத்தை மயக்கும் நடையை எதிர்பார்ப்பார்கள். ஆனால் பாவம், ஏமாந்து போவார்கள்.

'அனார்கலி! அனுப் பொழுதும் உன்னை விட்டு அகலாதிருக்க மார்க்கமொன்று தேடுகிறேன். கிடைக்கவில்லை.'

'நீங்களோ போர்வீரர்! உங்களுக்குத் தெரியாதா என்ன! உலகத்திலே நிரந்தரமான சமாதானம் நிலைத்த பிறகுதான், வானத்திலே வல்லூறுகளுக்குப் பதிலாக வெண்புறாக்கள் வட்டமிடும் நிலை ஏற்பட்ட பிறகுதான், வீரர்கள் வீட்டுக் காதல் விழாவில் இடைவேளை ஏற்படாமல் இருக்க முடியும். இல்லையா கண்ணாளா?

'அனார்! இரவு நேரம் சொல்லாமலே விடைபெறுகிறது நம்மைக் கொல்லாமலே கொல்லுகிறது. என் செய்வது, புறப்படட்டுமா?'

'ஆமாம்... கடமை அழைக்கிறது உங்களை!'

'அதை உன் காந்தக்கண் தடுக்கிறது...''

இந்த உரையாடல்களை எழுதிய இந்தப் பேனா,

'ஆடிவரும் பொன் விளக்கே!
அழகுமணி மாளிகையின்
அலங்காரத் திருவுருவே...'

என்று காதல் வர்ணனைகளைக் காட்டாற்று வெள்ளமெனப் பொழிந்து தள்ளிய இந்தப் பேனா, இப்போது மிகச் சாதாரண நடையில் சில செய்திகளைச் சொல்லப் போகிறது.

அரசியல் நிகழ்ச்சிகள், சமுதாய எழுச்சிகள், பொதுவாழ்வுப் பணிகள், கலை இலக்கியப் பயணங்கள் என்று பல மணிகளைக் கோத்திடும் இழையாக என் வாழ்க்கை வரலாற்றை 'நெஞ்சுக்கு நீதி' எனும் பெயரில் மூன்று பாகங்களாக ஒவ்வொன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுநூறு எழுநூறு பக்கங்கள் கொண்ட பெரும் புத்தகங்களாக எழுதி யிருக்கின்றேன்.அந்தச் சுயசரிதையில் என் தனிப்பட்ட வாழ்க்கை என்பது குழம்பில் கிடக்கும் கடுகு போன்றது. அந்தக் கடுகிலும் ஓர் அணு அளவுக்கும் குறைவாகத்தான் காதல் சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

'நெஞ்சுக்கு நீதி' முதல் பாகம் 74-வது பக்கத்தில் பின்வருமாறு என் இளமைக் காலக் காதல் குறித்து எழுதியிருக்கிறேன்.

*'ஏதாவது ஒரு அலுவலகத்தில் வேலை பார்த்து மாதம் ஐம்பது ரூபாய் சம்பாதித்தால் போதும். அதற்கு முயற்சி செய்' என்று வீட்டார் என்னை விரட்டத் தொடங்கினார்கள். எனக்கு வேலை பார்ப்பது என்பது விஷம் போல் இருந்தது. மனநிம்மதி குலைந்தது. சோற்றுக்குத் தண்டமாக வீட்டில் இருக்கிறோம் என்ற நினைவு வேறு என்னைக் குடைய ஆரம்பித்தது. இந்த வெட்கக்கேட்டில் காதல் ஒரு கேடா? அதுவும் வந்து சேர்ந்தது. காதலுடன் கூடக் கட்டுப்பாடும் தொடர்ந்தது. கன்னியொருத்தியின் கைப்பிடித்து வாழ்க்கைப் பயணம் தொடங்கலாம் என்று நானே தீர்மானித்தேன். அவளும் சம்மதித்தாள். இடையே பெற்றோர் குறுக்கிட்டனர். இரு தரப்பிலும் படை திரண்டது. இறுதியில் காதல் தோற்றது.*

*அந்தத் தோல்விக்கு முக்கியக் காரணம், நான் சுயமரியாதை இயக்கத்துக்காரன் அவ்வளவுதான். புரோகித முறைப்படி அவளுக்கும் இன்னொருவனுக்கும் திருமணம் நடைபெற்றது. காதலில் தோல்வியுற்ற என் உள்ளத்தின் எதிரொலிதான் 'பழனியப்பனாக' இருந்து 'நச்சுக்கோப்பையாக' மாறிய அந்த நாடகம், நான் எழுதி நடித்தது.*

இப்படிச் சுருக்கமாக என் காதல் கதை 'நெஞ்சுக்கு நீதி' சுயசரிதையில் சுட்டிக் காட்டப்படுகிறது.

அந்தக் காதல் நடந்த நாட்களையும் அது தோல்வி யுற்ற காரணத்தையும் நினைத்துச் சுவைக்கும் வயது இப்போது எனக்கு! அதனால் அந்தக் காதல் படிக்கட்டுகளில் என் நினை வுக் கால்களால் சற்று நடந்து திரும்புகிறேன். ஆம், அன்று எழுதாததை அல்லது எழுத விட்டுப் போனதை, இன்று



எழுதுகிறேன். எழுதக் கூச்சப்படும் இளமைப் பருவம் பறந்து விட்டதால் இந்த முதுமைக்கு ஏற்பட்ட துணிச்சல், வெட்கம் மறந்துவிட்ட நிலையில் எழுதிடத் தூண்டுகிறது என்னை, அதனால் எழுதுகிறேன்.

கொடி ஊர்வலங்கள்-கூட்டங்களில் முழக்கங்கள்-கொள்கை பரப்பிட நாடகங்கள் என்று கோடை வெப்பத்தில் தகித்துக் கொண்டிருந்த நான், இடையிடையே திருவாரூர் உயர்நிலைப் பள்ளியின் வகுப்பறைகளுக்கும் சென்று திரும்பிக் கொண்டிருந்த பள்ளிப் பருவ காலமது. அப்போதுதான் அவளிடம் நானும், என்னிடம் அவளும் மனத்தைப் பறிகொடுத்த நிகழ்ச்சி நடந்தது. அவள் பெயர்... அவள் பெயர்... உண்மைப் பெயரைச் சொல்ல வேண்டாம்... ஏனென்றால் அவள் இன்னும் உயிரோடு இருக்கிறாள். குறிப்பாக, சாந்தா என்று ஓர் அடையாளப் பெயர் வைத்துக்கொள்வோமே! சாந்தா என்பதில் ஓர் எழுத்து மாறினால் அவள் உண்மைப் பெயர். கண்டு பிடியுங்கள் பார்க்கலாம் என்று பரிசுப்போட்டி வைக்க விரும்பவில்லை. அந்த சாந்தா என்னுடன் அதே பள்ளியில்தான் படித்துக் கொண்டிருந்தாள். ஒரு வகையில் தூரத்து உறவும் கூட! நல்ல உறவில்தானே பொல்லாத பகையும் முளைத்துத் தொலைக்கும். எங்கள் இரு வீட்டாருக்கும் பேச்சுவார்த்தைகள் கூட இல்லாத அளவுக்கு சென்மப் பகை! அந்தப் பகை நடுவே, எங்களுக்குள் பனிப்புகை நடுவே புகுந்த

*வாழ்க்கைச் செலவு என்பது இப்போது பெரும் பிரச்சினைதான். பிள்ளைகளின் படிப்புக்கான செலவுகள் தவிர மீதி அனைத்திலும் நாம் கடும் சிக்கனமாகவே இருக்க வேண்டியுள்ளது. பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள் போன்றவையும் விலையேறியுள்ளது. பெற்றோர் மிகவும் சிக்கனமாக இருந்து பிள்ளைகளின் செலவுகளுக்கே முக்கியத்தும் கொடுக்கின்றனர். முன்பு எமது வருமானம் குடும்பத்திலுள்ள அனைவரினது எல்லாச் செலவுகளையும் ஈடுசெய்யக் கூடியதாக இருந்தது. இப்போது அப்படியல்ல. இருந்தாலும் எமது செலவுகளைக் கட்டுப்படுத்தி பிள்ளைகளின் கல்விக்கான செலவுகளுக்கு ஒதுக்குகிறோம்.*

**திரு. லூக்காஸ்**

*குடும்பத் தலைவர் ,பம்பலப்பிட்டி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர் போல காதல் தோன்றிவிட்டது. அவள் பள்ளிக்குப் புறப்படும் நேரம் பார்த்து நானும் புறப்படுவேன். ஆரூரின் அகன்ற சாலைகளில் அவள் ஒரு பக்கம் போவாள். நான் இன்னொரு பக்கமாகத் தொடர்ந்து நடப்பேன். அவள் திரும்பிப் பாக்கிறாளா என்று நான் அவள் பின்னால் நடப்பதும் உண்டு. நான் திரும்பிப் பார்ப்பதை அவள் கடைக்கண்ணால் கண்டிட, அவள் என் பின்னால் நடப்பதும் உண்டு.

மாலையில் பள்ளி முடிந்ததும் அவள், தட்டச்சு கற்றுக்கொள்ள கமலாலயக் குளக்கரையில் இருந்த ஒரு 'டைப்ரைட்டிங்' நிலையத்துக்குச் செல்வாள். நானும் தட்டச்சு கற்றுக் கொள்வதில் ஆர்வம் கொண்டிருப்பதாக என் வீட்டில் பொய்யுரைத்து மாதம் இரண்டு ரூபாய் சம்பளத்தை அந்த நிலையத்தில் வீணாக்கிக் கொண்டிருந்தேன். அவள் தட்டச்சு பயிற்சி முடித்துப் புறப்பட்டவுடன் நானும் புறப்பட்டு விடுவேன். என் தட்டச்சுப் பயிற்சியில் ஆங்கில எழுத்துக்களான 'எல் - ஓ - வி - இ' என்பதைத் தவிர வேறு எதையும் நான் கற்றுக் கொள்ளவில்லை. அந்த எழுத்துக்களை மட்டுமே தட்டச்சுப் பொறிக்குப் பதிலாக என் இதயத்தில் அடித்துப் பழகி, பதிய வைத்துக்கொண்டு சில நாட்கள் பைத்தியமாகத் திரிந்தேன்.

'கண்ணொடு கண் நோக்கும் காதல்' பிறகு கடிதக் காதலாக மாறியது. திருவாரூரில் நான் தங்கிப் படித்துக் கொண்டிருந்த வீட்டில் ஒரு சிறுவனும் சிறுமியும் என் அன்புக்குப் பாத்திரமானவர்கள். காலை எழுந்தவுடன் அவர்களுக்குப் படிப்பு சொல்லிக் கொடுப்பேன். சரியாகப் படிக்கச் சொல்லி அவர்களைக் கண்டிப்பதும் உண்டு. அந்தச் சிறுவனை மட்டும் காதைத் திருகித் தண்டிப்பதும் உண்டு. நான் தங்கிப் படித்த அந்த வீட்டுக்கு அருகில் அதே தெருவில் தான் என் சாந்தாவின் வீடும் இருந்தது. அவள் வீட்டுக் கொல்லைப்புறமும் என் பள்ளி நண்பன் ஒருவன் வீட்டுத் தெருவாசல் பகுதிகளும் எங்கள் விழிக்கணைகள் பாயும் காதல் களங்களாக இருந்தன. சில நாட்களில் என்னிடம் பாடம் பயின்று கொண்டிருந்த அந்தச் சிறுமி எங்களுக்கிடையே 'தூதி' ஆகி விட்டாள். ஒரு நாள் சாந்தா



அந்தத் தூதியிடம் என்னிடமிருந்து ஏதாவது புத்தகம் வாங்கி வா என்று கூறி அனுப்பினாள். அப்பாவித் தூதியான அந்தச் சிறுமி அந்தக் கோரிக்கையை என்னிடம் சொன்னவுடன் எனக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. இதயம் தான் எக்ஸ்பிரஸ் ரயில் போல ஓடிற்று. ஏதோ ஒரு புத்தகம் - பெயர் நினைவில்லை - அதைத் தூதியிடம் கொடுத்தனுப்பினேன். இரண்டு நாட்களில் தூதி மூலம் புத்தகம் திரும்பி வந்தது. புரட்டிப் பார்த்தேன். அப்பாவித் தூதிக்கே தெரியாமல் புத்தகத்துக்குள் ஒரு கடிதம். 'காதல்! காதல்! காதல் போயின் சாதல்! சாதல்!' பாரதியாரின் வரிகளை எழுதி, 'சாந்தா' என்று கையெழுத்திட்ட கடிதம். பதில் எழுதினேன். இன்னொரு புத்தகம் தூதியின் மூலம் கொடுத்தனுப்பினேன். அந்தக் கடிதத்தில் என்ன எழுதினேன்? அதுதான் பல ஆண்டுகளுக்குப் பிறகு 'மருத நாட்டு இளவரசி' படத்தில் எம் . ஜி . ஆரும் - வி . என் . ஜானகியும் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து கொண்டுள்ள நிலையில் எம்.ஜி.ஆர், ஜானகியம்மையாரைப் பார்த்துப் பேசிய காதல் வசனம்.

*'மிருக ஜாதியில் புலி, மானைக் கொல்லுகிறது.*

*மனித ஜாதியில் மான், புலியைக் கொல்லுகிறது.'*

இந்த வசனத்தின் பொருள் சாந்தாவுக்குப் புரிந்ததோ இல்லையோ அப்பாவித் தூதியாம் அந்தச் சிறுமியின் மூலம் புத்தகப் பரிமாற்றத் தபால் தொடர்ந்தது. ஒரு நாள் 'குபேர குசேலா' சினிமா பார்க்கக் குடும்பத்துடன் போவதாகக் கடிதக் குறிப்பு வந்தது. ஆரூர் ஆண்டாள் தெருவில் (இப்போது நேதாஜி சாலை) ரியால்டோ டாக்கீசில் அந்தப் படம் நடந்தது. பி.யு. சின்னப்பா - டி.ஆர். ராஜகுமாரி இருவரும் நடித்தது என்பதாக எனக்கு ஞாபகம். சாந்தாவின் வருகையை எதிர்பார்த்து நான் தென்னன் என்ற நண்பனுடன் முன்னதாகவே தியேட்டருக்குச் சென்று பெண்கள் அமரும் பகுதிக்கு அருகில் பெஞ்சு டிக்கெட் வாங்கி அமர்ந்து கொண்டோம். அவள் குடும்பத்துடன் வந்துவிட்டாள். அப்போதெல்லாம் திருவாரூரில் கூட தியேட்டர்களில் மணல் பரப்பிய தரைதான். ஏழெட்டுப் பேர் குடும்பத்தாருடன் வந்ததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளும் அவர்களும் மணல்தரையில் உட்கார்ந்தார்கள். எதிரேயுள்ள வெண் திரையை நோக்க வேண்டிய அவள் விழிகள், திரும்பித் திரும்பி எங்கள் பெஞ்சின் பக்கமே அலைந்து கொண்டிருந்தன. படத்தில் பாபநாசம் சிவன் எழுதிய 'நடையலங்காரம் கண்டேன்' என்ற ஒரு பாடல். கதாநாயகி நடந்து செல்லும் அழகைக் கண்டு கதாநாயகன் பாடுவான். 'நடையலங்காரம் கண்டேன் - நடையலங்காரம்... பின்னல் சடையலங்காரம்' என்று அந்தப் பாடலை சின்னப்பா மெய்மறந்து பாடும்போது எங்கள் விழிகளும் மெய்மறந்தன. 'அட; படம் முடிந்துவிட்டதா அதற்குள்?' என்ற திகைப்புடனும் ஏக்கத்துடனும் எழுந்து அவள் குடும்பத்தைப் பின்தொடர்ந்தேன். லட்சம் நட்சத்திரத்தினிடையே ஒரே நிலவுதான் இருக்கிற தென்றாலும் நிலவு மட்டும்தானே தெரியும். தொலைவில் - அவள் வீட்டார் காணாமல் பின் தொடர்ந்த எனக்கு, 'நடையலங்காரம் கண்டேன்' என்ற பாடலுக்கு ஏற்ப அவள் நடந்து செல்கிறாள் என்றே நினைத்துப் பெருமூச்சுவிடும் நிலைமை ஏற்பட்டது.

ஒரு நாள் சந்தித்தே தீருவது என்று எங்கள் கடிதங்கள் உறுதி முழக்கமிட்டன. அதன்படி அந்தி மாலை நேரத்தில் அவள் அம்மன் கோயிலுக்குப் போய் அர்ச்சனை செய்துவிட்டு, தட்டுடன் திரும்பும்போது அந்தக் குறுகலான சந்தில் உள்ள 'வீரனார் கோயில்' முன்பு அரைகுறை இருட்டில் அருகருகே சந்தித்துவிட்டோம். அந்த 'வீரனார்' அறிய மறக்கமாட்டேன் என்று கையடித்துச் சத்தியம் செய்தாள். மனசாட்சி அறியக் கைவிட மாட்டேன் என்று நானும் உறுதி அளித்தேன். உடனே பிரிந்து விட்டோம் அச்சம் எங்களை ஓங்கி ஓங்கி உதைத்ததால்!

காதலுக்குக் கண்ணில்லை என்பது காதல் மொழி. காதலிப்பவர்கள்தான் கண்ணை மூடிக்கொண்டு காதலிப்பார்கள். ஆனால், ஊரார் கண்கள் எல்லாம் அவர்கள் மீதே இருக்கும். அப்படிச் சில கண்கள் எங்கள் மீது பட்டுவிட்டன. அதனால் அவளின் அம்மன் கோயில் அர்ச்சனை தடுக்கப்பட்டு விட்டது. எனவே, வீரனார் கோயில் சந்திப்புக்கு முற்றுப் புள்ளி வைத்தாகிவிட்டது. அந்தக்



*அன்றாட வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் கொண்டே போகின்ற படியால் எல்லாவற்றிலும் திட்டமிட்டே வாழவே ண்டியுள்ளது. இது ஒரு வகையான நிர்ப்பந்தம்தான். எனக்குத் தெரிந்தவரை அன்றாடம் எமக்குத் தேவையான சமையல் பொருட்கள் விடயத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும். நன்கு சிந்தித்து அன்றன்றைக்குத் தேவையானவற்றை வாங்குவதே சிறந்தது. அளவுக்கதிகமாக வாங்கி அடுக்கிவிட்டுப் பழுதடைந்ததும் வீசுவதைவிட இது சிறந்த வழிதானே. வீட்டுக்கு விருந்தினர் வந்தால் மட்டும் விதிவிலக்காகச் சற்று அதிகம் வாங்கலாம்.*

**திருமதி. பாலேந்திரா**
*ஆசிரியை, வெள்ளவத்தை*

கோயில் அப்படியொன்றும் பெரிய மதில் சுவர்களும், உயர்ந்த கோபுரங்களும் கொண்டதல்ல. ஒரு பெரிய பங்களாவின் பின்முகட்டில் ஒரு திண்ணை மாடமே வீரனார் கோயில்! அதற்குள் எரியும் விளக்கே வீரனார்! இப்போது அந்த மாடம் அங்கு இருக்கிறதோ இல்லையோ - நான் தேடிப் பார்க்கச் சென்றால் என் பின்னால் திரண்டு விடுமே கூட்டம்!

சாந்தாவுக்கு மாப்பிள்ளை தேட அவசரத் திட்டம் வகுக்கப் பெற்றது. அவளோ கடைசிவரை போராடி இருக்கிறாள் எனக்காக. அதற்குள் அந்த வீட்டில் நடக்கும் அமளி என் வீட்டுக் கதவுகளைத் தட்டிவிட்டது. என்னிடம் கேட்டார்கள். ஆமாம் என்றேன். பகையை மறந்து சாந்தாவையே எனக்குப் பெண் கேட்க என் தந்தையும் தாயும் முதற்கட்டமாக என் உறவினர்களை அனுப்பினார்கள். அதற்குக் கிடைத்த பதில் என்ன?

'அவன் கட்சி கட்சி என்று உருப்படாமல் அலைந்து கொண்டிருக்கிறான். அவனுக்கா பெண் கொடுக்க முடியும்? அப்படியே கொடுப்பதாக இருந்தாலும், அவன் சுயமரியாதைக் கல்யாணமல்லவா செய்துகொள்ள வேண்டுமென்பான். சரி, பெண் கொடுக்கிறோம் புரோகிதத் திருமணம் செய்துகொள்ளச் சம்மதிப்பானா?'

பதில், பயங்கரமான கேள்விகளாக வெடித்தெழுந்தன. அந்தக் கேள்விகள் வடிவத்து நிபந்தனைகளை என்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்ள முடியுமா? எத்தனை எத்தனை சுயமரியாதைத் திருமணங்களை நான் முன்னின்றும் நானே சென்று வாழ்த்தியும் நடத்தி வைத்திருக்கிறேன். புரோகிதத் திருமணமென்றால் முடியாது என்று மறுத்தேன். அதற்கிடையே அவள் கடிதம் வந்தது கண்ணீரால் எழுதப்பட்டு! 'காதலா? கொள்கையா?' இதுதான் அந்தக் கடிதத்தின் கருப்பொருள்.

*'ஊருக்குத்தான் உபதேசம்.. உனக்கும் எனக்கும் இல்லையடியென்று கூறுவது எத்தனின் செயல் அல்லவா?'*

என்ற கருத்தமைந்த பதிலைக் கண்டிப்பான பதிலை அவளுக்கு எழுதினேன். அவள் தனது பிடிவாதத்தினால் பெற்றோரை இணங்க வைப்பாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அவளே இணங்கி விட்டாள் அவர்கள் பார்த்த மாப்பிளைக்குக் கழுத்தை நீட்ட!

ஏன்; அவள்தான் அந்தக் கொள்கையை விட்டுக் கொடுத்திருக்கக்கூடதா? இல்லை, நான்தான் என் கொள்கையை விட்டுக் கொடுத்திருக்கக்கூடாதா? அவளுக்குத்தான் 'வீரனார் கோயில்' சத்தியம் என்ன ஆயிற்று? எனக்குத்தான் நான் மனசாட்சிப்படி வழங்கிய உறுதி எங்கே போயிற்று? எப்படியோ இங்கே காதல் ஒரு பின்னடைவை எதிர்கொள்ள நேரிட்டு விட்டது.

என் கோணத்தில் பார்க்கும்போது அவள் காதல் தெய்வீகம் என்பது புளித்துப் போய்விட்டது. அவள் கோணத்தில் என்னைப் பார்த்தபோது 'ஈருடல் ஓர் உயிர்' என்ற காதல் தத்துவம் பொய்த்துப் போய்விட்டது. இப்படி உலக நடைமுறையை நோக்கினால் நூற்றுக்குப் பத்து சதவிகிதம்தான் அம்பிகாபதி-அமராவதிகளையும், லைலா-மஜ்னுக்களையும், ஆட்டனத்தி-ஆதிமந்திகளையும் காண முடிகிறது அதுவும் கதைகளில், காவியங்களில், இலக்கியங்களில்!

என்னுடையவளுக்காக அவள் பெற்றோர் தேடிய மணமகன், அவளைத் தன்னுடையவளாக்கிக் கொண்டான். நான் 'தேவதாஸ்' ஆகிடுவேனோ என்ற தேவையில்லாத பயத்தில் என் வீட்டார் எனக்கும் சிதம்பரம் ஜெயராம் தங்கையைப் பெண் பார்த்து, நானும் பெண்ணைப் பார்க்க வேண்டுமென்று அழைத்துச் சென்றார்கள்.



பெண்ணைப் பார்ப்பது இருக்கட்டும். சீர்திருத்தத் திருமணத்துக்கு ஒப்புக் கொள்வார்களா? ஒப்புக் கொள்ளாவிடில் பெண்ணைப் பார்த்து என்ன பயன்? முதலில் நான் காதலித்த பெண் போல ஆகிவிடப் போகிறது' என்றேன் வெறுப்புடன். பெண் வீட்டார் பழுத்த வைதீகர்கள் என்றாலும் என்னிடம் சுயமரியாதைத் திருமணத்துக்கு ஒப்புக் கொண்டார்கள். மணவிழாவும் நடைபெற்றது.

அதன் பின்னர் சில நாட்களில் ஒரு திகில் செய்தி. என்னை அதிர்ச்சியில் ஆழ்த்திய செய்தி. என்னை விடுத்து வேறொருவனை மணந்த சாந்தா விதவையாகி விட்டாள். அந்தக் கொடுமையான சம்பவத்தைக் கேள்விப்பட்டு சாந்தா எனும் கதா பாத்திரத்தை வைத்து 'நச்சுக்கோப்பை' நாடகம் எழுதி நடித்தேன். சாந்தா என்னைப் பிரிந்துவிடத் துணிந்ததை எண்ணியதால் ஏற்பட்ட கோபத்தையெல்லாம் உரையாடலாகத் தீட்டினேன். அவளையும் என்னையும் வெட்டிவிட்ட சமுதாயத்தையும் அந்த நாடக உரையாடல் வாயிலாகச் சாடினேன்.

*'எந்தச் சமுதாயம் அவளை மூடநம்பிக்கைக்காகப் பலியிட்டதோ, அதே சமுதாயம் அவளுடைய வாழ்வைத் துண்டித்து விட்டது! எந்தச் சமுதாயம் அவளுடைய வாழ்வைப் பிணைத்ததோ அதே சமுதாயம், அவளுடைய வாழ்வை முறித்தது. எந்த சாஸ்திரம் அவளுக்குத் திருமணம் நடத்தி வைத்ததோ அதே சாஸ்திரம் அவளை விதவையாக்கிற்று. எந்த வைதீகம் அவள் காதலை ஏற்க மறுத்ததோ, அதே வைதீகம் அவள் தாலியை அறுத்தது.'*

இப்படித் தீப்பொறி கிளம்பிற்று நச்சுக்கோப்பை நாடகத்தில் - நான் தீட்டிய வசனத்தில்.

அவள் வீட்டுக்கும் என் வீட்டுக்கும் தொடர்ந்து இருந்துவந்த பகை, அவளுக்கு ஏற்பட்ட அந்தச் சோகத்துக்குப் பிறகு மெல்ல மெல்ல அகன்று - இருவீட்டார் உறவிலும் ஒரு மறுமலர்ச்சி தோன்றியது. அந்த நேரத்தில் என் வேண்டுகோள் ஏற்கப்பட்டு, சாந்தாவின் மறுமணத்துக்கு அவளது வீட்டார் சம்மதம் தெரிவித்தார்கள். அவளுக்கு மறுவாழ்வு அளிக்க வந்தவனுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்தேன். அவளையும் வாழ்த்தினேன். அன்று என் விருப்பப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தத் திருமணத்துக்கு ஒப்புக் கொள்ளாமல் எங்களைப் பிரித்த அவளது பெற்றோர், சீர்திருத்தத்திலும் தீவிர சீர்திருத்தமான விதவைத் திருமணத்துக்கே ஒப்புதல் அளித்தார்கள் என்பது ஒரு விந்தைதானே!

ஈரோடு 'குடியரசு' அலுவலகத்தில் பெரியாரின் அரவணைப்பில் நான் இருந்தபோது 1945-ம் ஆண்டு 'கவிதையல்ல' என்ற தலைப்பிட்டு வெளியிடப்பட்ட சிறிய நூலில்...

***"புண்ணுக்கு மருந்திட்டு ஆற்ற வழி தேடிடுவாய்***
***கண்ணுக்குள் பாவை போல் உருண்டிடும் உள்ளம்-கைம்***
***பெண்ணுக்கு இருப்பதையும் உணர்ந்திடுவாய்.***
***'என் மனைவி இறந்திட்டால் வேறு மணம் வேண்டும்'-என்பாய்!***
***பின் நீ சாவு முனை அடைந்திட்டால்***
***உன் மனையாள் காவு கொடுக்க வேண்டுமோ காதல்தனை!"***

என நான் எழுதிய கருத்து சாந்தாவின் வாழ்க்கையிலேயே பலித்துவிட்டதால் எனக்கேற்பட்ட பரவசம் எல்லை கடந்தது. தோல்வியைத் தழுவிய அந்தக் காதல், சாவைத் தழுவாத காரணத்தினால்தான் அவள் வேறொருவனை மணந்தபோது என்னை ஆத்திரங்கொள்ளச் செய்தது. அவள் வாழ்விழந்தபோது என்னைச் சோகத்தில் ஆழ்த்தியது. அவள் மீண்டும் வாழ்வு பெற்றாள் என்றபோது ஆறுதல் தரும் மருந்தாக அமைந்தது. எனவே கைகூடாமற் போனாலும் காதல்; காதலிக்கப்பட்டவர்களைப் பிரிந்த நிலையிலும் வாழ்த்திக் கொண்டிருக்கும். அவர்களுக்காகக் கவலைப்படும்.


அவள் இப்போது எங்கேயோ இருக்கிறாள் எப்போதோ பார்த்த ஞாபகம் எழுபதை நெருங்கிக் கொண்டிருக்கும் வயதுடையாள்

ஆனாலும், இளமையில் நான் ரசித்த அந்தக் குண்டு குண்டான கெண்டை விழிகள் இன்றும் என் நினைவை விட்டு அகலுவதில்லை. அந்தக் கண்கள் மீது நான் கொண்ட காதல் அப்படியே மாறாமல் இருக்க வேண்டு மென்பதற்காக; இப்போது நான் அவளைப் பார்க்க விரும்பவில்லை. ●

நன்றி

***காதல் படிக்கட்டுகள்***






## தகவல் பகுதி

- ❖ உலகில் நுளம்புகளில் மூவாயிரம் வகை உண்டு. பெண் நுளம்புகள் மட்டுமே மனிதனைக் கடிக்கின்றன.
- ❖ ஆகாய விமானத்தில் இருக்கும் கறுப்புப் பெட்டியின் நிறம் மஞ்சள் அல்லது செம்மஞ்சள் நிறத்திலேயே காணப்படும்.
- ❖ இதுவரை 128 நாடுகள் மரணதண்டனையை நிறைவேற்று வதையோ வழங்குதையோ ஒழித்துக் கட்டி விட்டன.
- ❖ புகையிரதம் கண்டுபிடிக்கு முன்னரே தண்டவாளம் கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. அதுபோல் தீப்பெட்டி கண்டுபிடிக்கப்படு முன்னரே 'லைட்டர்' கண்டுபிடிக்கப்பட்டு விட்டது.
- ❖ இதுவரை எந்தவொரு வெளிநாட்டு அல்லது உள்நாட்டு யுத்தத்தையோ சந்திக்காத ஒரே நாடு சுவீடன்.
- ❖ தற்போது தொலைபேசித் துறையில் பிரபல்யம் அடைந்து வரும் CDMA என்பதை விரிவாக எழுதினால் Code Division Multiple Access என்று வரும்.
- ❖ தோமஸ் அல்வா எடிசன் கண்டுபிடித்து உரிமையைப் பதிவு செய்த கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கை 1093.
- ❖ நிலத்துக்கு அடியில் இருக்கும் எண்ணெயின் பெரும்பகுதியை பக்டீரியாக்கள் சாப்பிட்டு விடுகின்றன.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையிலோ, ஐரோப்பிய யூனியனிலோ அங்கம் வகிக்காத நாடு சுவிஸ் ஆகும்.
- ❖ IBM என்று அழைக்கப்படும் உலகப் பிரசித்தி பெற்ற நிறுவனத்தின் முழுப்பெயர் International Business Machines ஆகும்.
- ❖ முதன்முதலாக 06.08.1945 அன்று ஜப்பானின் ஷிரோஷிமா நகர்மீது வீசப்பட்ட அணுகுண்டின் பெயர் 'லிட்டில் போய்'(little boy). இரண்டாவது 09.08.1945 அன்று நாகசாகிமீது வீசப்பட்ட அணுகுண்டின் பெயர் 'ஃபற் மான்'(Fat man).
- ❖ ஒருநாள் மற்றும் டெஸ்ட் கிரிக்கெட்டில் தொடர்ந்து நான்கு பந்துகளிலும் விக்கெட் வீழ்த்திய ஒரே வீரர் இலங்கையின் லசித் மாலிங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சர்வதேச தினங்கள்

| | | |
|---|---|---|
| ஏப்ரல் | 17 | சர்வதேச விவசாயிகளின் புரட்சிச் செயற்பாட்டுத் தினம் |
| ஏப்ரல் | 22 | சர்வதேச புவித் தினம் |
| ஏப்ரல் | 23 | ஐக்கிய நாடுகள் உலக நூல் மற்றும் செயற்பாட்டுத் தினம் |
| ஏப்ரல் | 26 | சர்வதேச சேர் நோபில் விபத்துத் தினம் |
| ஏப்ரல் | 29 | சர்வதேச நடன தினம் |
| மே | 01 | சர்வதேச தொழிலாளர் தினம் |
| மே | 03 | சர்வதேச பத்திரிகைச் சுதந்திர தினம் |
| மே | 08 | சர்வதேச தல சேமியா தினம் |
| மே | 08 | சர்வதேச செஞ்சிலுவைத் தினம் |
| மே | 08 | சர்வதேச செஞ்சந்திர தினம் |
| மே | 12 | சர்வதேச தாதியர் தினம் |
| மே | 14 | சர்வதேச அன்னையர் தினம் |
| மே | 15 | சர்வதேச குடும்ப தினம் |



## பாவற்காய் சாமியார்

அது ஒரு அழகான சிறிய கிராமம். அந்தக் கிராமத்திற்கு சாமியார் ஒருவர் வந்தார். அவரிடம் அந்தக் கிராம மக்கள் எல்லோரும் சென்று ஆசி பெற்று வந்தனர். சில நாட்களிலேயே அந்தச் சாமியார் கிராம மக்களின் பாசத்திற்குரிய ஒருவரானார். ஆதலால் சாமியாருக்குரிய நாளாந்த உணவைக் கிராம மக்களே முறை வைத்துக் கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி சாமியாரும் ஒவ்வொரு வீடாகப் போய் விருந்துண்டு ஆசி வழங்கி வந்தார்.

ஒருநாள் ஒரு வீட்டுக்குப் போயிருந்தபோது அவரையும் கூட வந்திருந்தோரையும் வரவேற்றுப் பந்தியில் இருத்தினர். உணவு பரிமாறப்பட்டபோது சாமியாருக்குப் பாவற்காய் கறியும் போடப்பட்டது. ஆனால் சாமியாருக்குப் பாவற்காய் கறி என்றால் பிடிக்கவே பிடிக்காது. விருந்தில் இருந்து எழுந்து போய் விடலாமா என்று கூட யோசித்தார். ஆனாலும் பொறுமை சகிப்புத்தன்மையைப் போதிக்கும் தான் எழுந்து போனால் மக்கள் தன்னைத் தவறாக



நினைத்து விடுவார்களே என்று கருதி உணவை உட்கொள்ளத் தொடங்கினார். பாவற்காயின் மணம் அவரைச் சாப்பிட விடாமல் இடைஞ்சல் தந்தது. எனவே இலையில் இருந்த பாவற்காய் முழுவதையும் ஒரேயடியாகச் சாப்பிட்டு விட்டுத் தொடர்ந்து சாப்பிட்டார். இதனைக் கவனித்த அவ்வீட்டுப் பெண்மணி சாமியாருக்குப் பாவற்காய்க் கறிதான் மிகவும் பிடித்திருக்கிறது என்று நினைத்து மீண்டும் சாமியாருக்குப் பாவற்காய் கறியைக் கொண்டு வந்து போட்டார். சாமியாரும் முன்பு போல பாவற்காய் முழுவதையும் ஒரேயடியாகச் சாப்பிட்டு விட்டுத் தொடர்ந்து சாப்பிட்டார். இவ்வளவு ஆசையாகச் சாமியார் பாவற்காய் சாப்பிடுகிறாரே என்று எண்ணிய அவ்வீட்டுப் பெண்மணி தான் சமைத்த பாவற்காய் முழுவதையும் கொண்டு வந்து சாமியாரின் இலையில் போட்டு விட்டார். சாமியாரும் வேறு வழியில்லாமல் பாவற்காய் முழுவதையும் சாப்பிட்டு விட்டுச் சென்றார்.

அடுத்த நாள் முன்வீட்டுப் பெண்மணியின் முறையாகும். சாமியார் போனபின் அந்த வீட்டுக்கு, முன்வீட்டுப் பெண்மணி வந்து சாமியார் விரும்பி உண்ணும் உணவு எது என்று விசாரித்தாள். அவர்களும் பாவற்காய்தான் சாமியார் விரும்பி உண்ணும் உணவு என்று விளக்கமாகக் கூறினார்கள்.

அடுத்த நாள் முன்வீட்டுக்கு சாப்பிட அமர்ந்த சாமியாருக்குப் பயங்கர அதிர்ச்சி. ஏனெனில் அவரது இலையில் பாவற்காய்க் குழம்பு, பாவற்காய்ப் பொரியல், பாவற்காய்ச் சம்பல் என்று எல்லாமே பாவற்காய் மயமாகவே இருந்தன.

அந்தச் சாமியாருக்குப் பிடித்த உணவு பாவற்காய்தான் என்ற விடயம் அந்தக் கிராமம் முழுவதும் பரவியது. அதனால் கிராம மக்கள் அவருக்குப் பாவற்காய்ச் சாமியார் என்று பெயரும் சூட்டி பாவற்காய்ப் படையலே நடத்தினார்கள். தங்குதடையின்றிச் சாமியாருக்குப் பாவற்காய் கிடைக்க வேண்டும் என்பதற்காக பாவற்காய்த் தோட்டமும் அமைத்தார்கள்.

சில நாட்களின் பின் சாமியார் வழமையான மருத்துவப் பரிசோதனைக்குப் போனார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்களுக்கு ஆச்சரியம். ஏனெனில் ஏற்கெனவே அவருக்கிருந்த நீரிழிவு நோய் காணாமல் போயிருந்தது.

**படிப்பினை** : கல்வி என்பது சிலருக்குக் கசப்பாகத் தென்படலாம். ஆனால் அதனைக் கற்றுத் தேறியதும் வாழ்க்கையே இனிமையானதாக மாறிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடொன்று அறிவோம்

பார்படோஸ் - **BARBADOS**

2007 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வருகின்றன. அவற்றின் இறுதிப் போட்டி நடைபெறவுள்ள பார்படோஸ் தீவைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம். இது நிலத்தினால் வேறு எந்தப் பகுதியோடும் தொடர்பில்லாத தீவு ஆகும். கரீபியன் கடலின் கிழக்குப் பகுதியில் ட்ரினிடாடிலிருந்து 300 கிலோ மீற்றர் தொலைவில் இது அமைந்துள்ளது.

| | |
|---|---|
| தலைநகர் | : பிரிட்ஜ் ரவுண் |
| பரப்பளவு | : 430 ச.கி.மீ |
| ஆட்சி மொழி | : ஆங்கிலம் |
| சனத்தொகை | : 2,79,912 (2006ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி) |
| சமயம் | : கிறிஸ்தவர்கள் 71% , சமயமற்றோர் 17%, ஏனையோர் 12% |
| முக்கிய பொருளாதாரம் | : உற்பத்தித்துறை (சீனி, ரம்) மற்றும் சுற்றுலா |
| முக்கிய உற்பத்திகள் | : கரும்பு, கரட், சோளம், மீன், இரசாயனம், துணிகள், மின்னணுப் பொருட்கள். |
| சுதந்திர தினம் | : 30.11.1966 |
| நாட்டின் தலைவர் | : மகாராணி இரண்டாம் எலிசபெத் |
| கவர்னர் ஜெனரல் | : சேர்.கிளி.'.போர்ட் ஹஸ்பண்ட்ஸ் |
| பிரதமர் | : ஒவன் செய்மோன் ஆதர் |

பிரிட்ஜ் ரவுண், ஸ்பெயிட்ஜ் ரவுண் போன்றவற்றை முக்கிய நகரங்களாகக் கொண்ட இந்நாட்டில் பல கட்சியினரைக் கொண்ட இரண்டு சட்ட அவைகள் காணப்படுகின்றன. இவற்றில் முக்கியமானது 27 உறுப்பினர்களைக் கொண்ட சட்டப்பேரவை ஆகும். 1966 இல் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றிருந்தாலும் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் வரம்புடைய முடியரசு ஆட்சியே நிலவுகிறது. மகாராணியின் பிரதிநிதியாக கவர்னர் ஜெனரல் அமைச்சரவையின் ஆலோசனைப்படி செயற்படுகிறார்.



## சின்னஞ்சிறு சிரிப்பு




குழந்தையின் பெயர் : **தனுஷ்**
அப்பா : **மு. பரமேஸ்வரன்**
அம்மா : **நந்தினி**

## வாழ்க்கைச் செலவு

எமது செலவுகளில் மின்சாரம் முக்கியமானது. ஆனால் அத்தியாவசியமானது. இதற்கான கட்டணமும் இப்போது மிக அதிகம். அதனால் மிகவும் சிக்கனமாக இருக்கிறோம். மின்விசிறியின் 'றெகுலேட்டரை' நிறுத்திய பின்னரும் 'சுவிட்ச்' போடப்பட்டிருந்தால் சிறிதளவேனும் மின்சாரம் விரயமாகும். எனவே அப்படியானவற்றை நாம் தவிர்த்து விடுகிறோம். குளிர்சாதனப் பெட்டியைக் கூட மூன்று மணிநேரம் வரை அணைத்து வைக்க முடியும். அத்துடன் அதனை அடிக்கடி திறந்து மூடினால் நிறைய மின்சக்தி வீணாகும். வேலைக்குச் செல்வோர் ஆடைகளை அழுத்த ஒவ்வொரு நாளும் மின்னழுத்தியைப் பாவிப்பதை விட ஒரு வாரத்திற்குரியதை ஒரேயடியாக அழுத்தினால் நிறைய மிச்சம் பிடிக்கலாம். சூடான பொருட்களே அதிகளவு மின்சாரத்தை இழுப்பதால் மின்னடுப்பு போன்றவற்றைப் பாவிக்கவே கூடாது. அதிக வெளிச்சம் தரும் சிக்கனமான மின்விளக்குகள் இப்போது இருப்பதால் அவற்றைப் பொருத்தி அப்போதும் தேவையானபோது மட்டும் பாவித்து வந்தால் நீங்கள் இதுவரை செலுத்தி வந்த மின்கட்டணம் பாதியாகக் குறைந்து விடும்.

திருமதி கௌரி கந்தசாமி வத்தளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கடைசியில்

சஞ்சிகை ஒன்றை வெளியிடுவது என்பது நமது நாட்டைப் பொறுத்தவரை இலகுவான விடயமல்ல என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு வெளியிட்டாலும் அதைத் தொடர்ந்து கொண்டுவருவது நடக்காத காரியம் என்றும் நம்பப்படுகிறது. வெளியீட்டாளர்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டோர் எனப் பலர் இணைந்து சஞ்சிகைகளின் தோல்விகளுக்கான காரணங்களை ஆராய்ந்தறியும் பொருட்டு அக்கறையோடு கூட்டங்கள் நடத்தி வேதனைப்படுமளவில் தான் சஞ்சிகையின் நிலை காணப்படுகிறது. இந்ததாக்கத்திற்குள் நதியும் சிக்கித் தவித்ததை எமது வாசகர்களுக்கு நாம் தெரிவித்தே ஆக வேண்டும். ஆர்வத்துடன் எழுத் முன் வருபவர்கள் அவற்றைப் பெறுதல்,, வடிவமைத்தல், விளம்பரம், விநியோகம் என எல்லா மட்டத்திலும் பிரச்சினைகளைச் சந்தித்தாலும் களைகளைப் பிடுங்கி எறிந்து விட்டு புதிய விதைகளை நட்டு அவற்றையே விருட்ச நிழல்களாய்க் கொண்டு நதி மீண்டும் வருகிறது. அதன் பயணம் நின்று விடக் கூடாது என்பதே சஞ்சிகை ஆள்வலர்களின் பேரவா ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org